
காதைச்சி

ஆசிரியர்: சி.என். அண்ணாதுரை



அதுதான் உலகம்

"சார்..."
"....."
"சார்..."
"ஊம்...என்னப்பா வடிவேலு"
"ஒண்ணும் இல்லிங்க, இன்று கொஞ்சம் சீக்கிரம் வீட்டுக்குப் போகவேணும். வீட்டிலே..." வடிவேலுவின் பேச்சு முடிவற்கு முன்னமே கடிகாரம் ஐந்து முறை ஒலிக்கிறது. மாலை மணி ஐந்து!

கார்மேகம் அவன் சொன்னதையும் முழுக்கக் கேட்கவில்லை, கடிகாரம் ஒலித்ததையும் எண்ணிக் கொண்டிருக்கவில்லை.

"சரி போ நாளைக்காவது சீக்கிரம் வந்துசேர்" என்று உத்தரவு கொடுத்தார்.

கார்மேகம் அந்த நூல் நிலையத்தின் துணைத் தலைமை அலுவலர், வடிவேலு சிற்றாள். இப்படி நாள் தோறும் ஏதேனும்காரணம்சொல்லி வீட்டிற்குப்போவது அவனுக்குப் பழக்கமாகிவிட்டது. வீட்டிற்குப் போகிறான் என்று அவர் எண்ணிக் கொண்டிருக்கிறார். ஆனால் அவன் ஏதாவது ஒரு சினிமா பார்த்து விட்டு பத்து மணிக்குத்தான் வீட்டுக்குப் போவான் என்பது அவருக்கு எப்படித் தெரியும்? அவர் தான் தன் இருகையில் அமர்ந்தால் உலகத்தையே மறந்துவிடுபவர் ஆயிற்றே!

வடிவேலுவை அனுப்பிய பிறகு, தம் எதிரில் கிடந்த பெரிய புத்தகத்தைப் புரட்டி எந்தெந்த புத்தகம் யார்யாரிடம் நீண்டநாள் தங்கிவிட்டது என்ற பட்டியல் தயாரிக்கத் தொடங்கிவிட்டார். ஏழு மணிவரை நூல்நிலையம் திறந்துவைக்கப்பட்டிருக்கும். அதுவரை செய்வதற்கு ஏதேனும் வேலைவேண்டும். அல்லாமலும் அவரிடம் வேலையைக் குறையாக விடுவது என்ற பழக்கமே கிடையாதே.

எவ்வளவு நேரம் அந்த வேலையில் ஈடுபட்டிருந்தாரோ தெரியாது.

மறுபடியும் "சார்..." என்ற குரல் கேட்டுத் தலை நிமிர்ந்தார்.

"நீயா குழந்தை, வா. என்ன புத்தகம்வேண்டுமோ, போ, போய்எடுத்துக்கொள்" என்று சொல்லிவிட்டு மீண்டும் பேரேட்டுக்குள் தலையை நுழைத்துக்கொள்ள முனைந்தார்.

ஆனால் குழந்தை அவரை விடவில்லை. "எடுத்துக்கொண்டேன் சார், இது முன்னே கொண்டுபோன புத்தகம், இதை வரவில் வைத்துக் கொண்டு, இந்தப் புத்தகத்தை என் பெயரில் எழுதிக்கொண்டு கொடுங்கள்" என்று சொல்லி தலையணை மாதிரி இருந்த இரண்டு புத்தகங்களை ஒன்றின்பின் ஒன்றுக எடுத்து மேசைமேல் வைத்தது.

கார்மேகம் அப்படியே செய்துவிட்டு, அந்தக் குழந்தையை பதினெட்டு வயது இருக்கும் கொடி மாதிரி உடல் அமைப்பு; அந்தக் கொடியிலே பூத்த மலர் மாதிரி முக அமைப்பு, நடைவனப்போ சொல்லத் தேவையில்லை. கார்மேகம் இதைப்பற்றி ஒன்றும் எண்ணுமல், இவ்வளவு இளம் வயதில் இந்தக் குழந்தை இப்படிப்பட்ட புத்தகங்களாகப் படிக்கிறதே என்ற வியப்பில் ஆழ்ந்து போய்விட்டார். 'அருளே உலகை ஆளும்' 'மனிதா உன்னை அறி' 'கல்லும் கடவுளும்' இதுமாதிரியான புத்தகங்களையே அந்தக் குழந்தை படித்து வந்தது.

இந்தக் காலத்தில் இப்படி ஒரு அதிசயப் பிறவி இருக்கிறதே என்று எண்ணினார். 'காதலே உலகம்', 'இன்பம் அன்றி வேறு வேண்டா' 'கொடு, கொடு, எனக்கே கொடு' என்று ஏதாவது ஒரு புத்தகத்தைத் தூக்கிக்கொண்டுவந்து அழுது கொண்டிருப்பவர்களையே நாளும் பார்க்கிற அவர், இந்தக் குழந்தையின் போக்கிலே வியப்புக் கொண்டதில் வியப்படைய என்ன இருக்கிறது?

"சார்....."

தலை நிமிர்ந்த கார்மேகத்தின் முன் இப்போது ஒரு குழந்தை நின்றது; இது ஆண் குழந்தை. கட்டான உடல், கவர்ச்சியான தோற்றம், நவநாகரிகமான உடை ஆனால் இதுவும் ஒரு பைத்தியமே என்பது அவருக்குத் தெரியும்.

'காதலிப்பது கடமை' 'உடல் உறவே உலகம்' என்பது மாதிரியான புத்தகங்களாகப் படிக்கக் கூடாதோ—அதுதான் இல்லை. அந்தக் குழந்தைக்கு இது சலித்தது இல்லை. அதேமாதிரியான கற்பனைக்குப் பிடிபடாத சங்கதிகளைப் பற்றியே இந்தக் காளையும் படிப்பது. ஏறக்குறைய இருவர் படிக்கும் புத்தகங்களும் ஒன்றுகவே இருக்கும்; முன்பின்னுக இருக்கும். இவன் படித்ததை அவள் படிப்பாள், அவள் படித்ததை இவன் படிப்பான். சில நாட்களில் முறை இந்தப் பக்கம் மாறும். அவ்வளவுதான்.

குழந்தை கொடுத்துவிட்டுப் போன புத்தகத்தை எடுத்து அவன் முன் நீட்டி "இது வேண்டுமா?" என்று கேட்டார். "ஆமாம் சார், இதுவேதான் சார் இரண்டு வாரமாகத் தேடுகிறேன் சார்" என்று கூறி அதை வெடுக்கென்று பறித்துக்கொண்டான்.

சீட்டு எழுதிக்கொண்டு அவனை அனுப்பிய பிறகு, கார்மேகத்துக்கு கெட்டுப் போகிறது கெட்டுப் போகிறது என்று அறியாமல் சொல்கிறார்களே. இந்தக் குழந்தைகளை அவர்கள் பார்க்கவேண்டும். அப்புறம் பேசவேண்டும். என்ன அக்கறை, என்ன அக்கறை எவ்வளவு படிப்பு. என்று எண்ணிஎண்ணி மகிழ்ந்தார்.

ஏழு மணி ஆயிற்று, கதவைப் பூட்டிக்கொண்டு அவர் புறப்பட்டார்.

இப்படி எத்தனையோ நாள். அந்தக் குழந்தைகள் அரிய பெரிய புத்தகங்களை எல்லாம் படித்து முடித்துவிட்டன. இனி அவர்களுக்கு கொடுக்க ஏதும் புத்தகம் இல்லையே என்று அவர் கவலையில் மூழ்கிப் போய்க் கிடந்தபோது, ஒருநாள் அவர்கள் இருவரும் சேர்ந்து அவரிடம் வந்தனர். இதுவரை அவர்கள் சேர்ந்து வந்தது இல்லை. ஒரு பேச்சு ஒருவரோடு ஒருவர் பேசியது இல்லை. இப்போது அவர்களை இணையாகப் பார்த்ததினால் கார்மேகம் வியப்பில் விழுந்தார்.

இருவரும் அவரை நெருங்கி வந்து 'வணக்கம்' என்று கைகுவித்தனர்; ஒரு அழைப்பிதழை எடுத்து நீட்டினர். வியப்பில் விழுந்தவர் எழுந்து, அந்த அழைப்பிதழைப் படித்தபோது திகைப்பில் ஆழ்ந்தார். அழைப்பிதழில் அவர்கள் இருவருக்கும் திருணம் என்று எழுதியிருந்தது. அதைக்கண்டுதான் அவர் திகைப்பில் ஆழ்ந்தது.

அழைப்பிதழைக் கொடுத்தோடு அவர்கள் திரும்பவில்லை. "சார், உங்களால்தான் இந்தத் திருமணமே நடக்கிறது. நீங்கள் இல்லாவிட்டால் எங்கள் காதல் வளரவே வழியில்லாது போயிருக்கும் என்றனர்.

திகைப்பு மாறி குழப்பம் ஏற்பட்டது கார்மேகத்திற்கு. "நானு-உங்கள் காதலை வளர்த்தேனு — ஒன்றுமே விளங்கவில்லையே என்று குழம்பினர்-குளறினர்.

"ஆமாம் சார், நாங்கள் எடுத்துச் சென்று திரும்பக் கொண்டு வந்த புத்தகத்தில் கடிதங்களைப் பரிமாறிக்கொள்வோம். வீட்டில் இருந்த கட்டுப்பாட்டால் ஒருவரை ஒருவர் சந்திக்க முடியாததால் இந்த ஏற்பாட்டைச் செய்துகொண்டோம். நீங்களும், நாங்கள் கொடுத்த புத்தகத்தை அப்படியே ஒருவர் மாற்றி ஒருவரிடம் கொடுத்து கடிதப் போக்கு வரவுக்கு வழி செய்தீர்கள். மிக்க நன்றி சார். கட்டாயம் திருமணத்திற்கு வரவேண்டும்" என்று சொல்லிவிட்டுப் படியிறங்கினார்கள்.

'வடிவேலு' என்றழைத்தார் கார்மேகம்.

"அதுதான் சார் உலகம்" என்



மலர் 1 20—12—64 இதழ் 22

"துப்பாக்கித் துரைத்தனம்"

'கடிது ஓச்சி மெல்ல எறிக' என்ருர் திருவள்ளுவர். அரசனுக்கு ஆளும் முறையைச் சொல்லும்போது தண்டனை எப்படி அமைதல் வேண்டும் என்பதைக் கூறுகிருர். ஓங்குகின்றபோது, கையை உயரத் தூக்கலாம்; ஆனல் ஆடி விழுகின்றபோது அந்த அடி மெதுவாக இருக்கவேண்டும் என்பது கருத்து. அடிப்பதைவிட அடிப்பதுபோல் நடிக்கவேண்டும் என்கிருர். கடிது ஓச்சுக; ஆனல் மெல்ல எறிக என்ருர். யாருக்கு? தன் வளர்ச்சியை நீண்டநாள் விரும்பும் அரசனுக்கு. இன்று இருந்து நாளை போவார்க்கு அல்ல, நெடிதாக ஆக்கம் தம்பால் நீங்காது இருக்கவேண்டும் என்பார்க்கு அவ் வழியைக் கூறினர்.

திருவள்ளுவர் அறம் கூறி ஈராயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன எனினும், இன்றும் அவ்வறம் நின்று நிலைக்கத்தக்கதே. காலத்தை வென்று வழிகாட்டும் தகுதியும் தன்மையும் உடையதே வள்ளுவரின் வழி.

இன்று நாடாளுவோர் இதனை எள்ளளவும் எண்ணுவதாகத் தெரியவில்லை. நெடிதாக்கம் தம்பால் நீங்காது இருக்கவேண்டும் என்று எண்ணுகின்றனரேயன்றி அதற்கான வழியில் செல்லுவது இல்லை என்பதையே அவர்கள் போக்குக் காட்டுகின்றது. மக்களுடைய குரலை மதித்து, அதன்படி நடப்பதே ஆள்வோரின் கடமையாக இருக்கவேண்டும். மக்கள் தவருன கோரிக்கைகளை விடுத்தாலும், அதனை அவர்களிடம் எடுத்தியம்பி, தங்களுடைய இயலாமையைச் சொல்வது அறவழி; அறிவு வழி. அதை விட்டுவிட்டு, 'இதோபார் தடி, இது துப்பாக்கி — ஓடு இல்லையேல் சுட்டுவிடுவேன் — சாக்கிரதை' என்று மிரட்டுவதும் விரட்டுவதும் காட்டுமிராண்டித்தனம் ஆகும். நாட்டு நடப்பில் காட்டுமுறை புகுந்துவிடுமானல். அந்த நிலையை நாகரிக நிலை என்ருே, நெறியுடைய ஆட்சி முறை என்ருே நிச்சயம் கூறிட முடியாது.

இன்று தமிழகத்தின் நிலையைக் காணும்போது, ஆட்சி முறையில் புகுந்திருக்கும் 'அடி உதை அடக்கு' என்னும் போக்கினைக் காணும்போது நமக்கு ஏற்படும் திகைப்பை எப்படிக் கூறுவது என்றே தெரியவில்லை. இரண்டு திங்களில் நான்குமுறை துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது. பருவத்துக்கு ஒன்று பங்கு செய்ததுபோல்இத்துணை துப்பாக்கிச் சூடுகள் நடந்திருப்பதைக் காணும்போது, ஒன்று மக்கள் திடும்என மாக்களாகி விட்டிருக்க வேண்டும், அல்லது அரசு திடும்என ஆணவம் கொண்டதாகிவிட்டிருக்க வேண்டும் என்றே நினைக்க இடம் உண்டாகிறது. மக்கள் திடும்என மாறிவிட்டிருப்பார்கள் என்று முடிவு செய்ய இயலவில்லை. ஏன்எனில் நான்கிடங்களிலும், நான்கு வகையான மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. எனவே அத்தனை விதமான சமுதாயமும் மாறிவிட்டிருக்கும் என்று நினைக்கக்கூடவில்லை. நான்கிடங்களிலும் ஒரே அரசே கோலோச்சுகின்றது. எனவே தவறு துப்பாக்கியைத் தூக்கிய இடத்தில் என்று சொல்லத் தோன்றுகின்றதேயன்றித் துப்பாக்கிக்கு இரையானேரிடம் என்று கருதவும் இடம் காணேம்.

இத்தனைக்கும் நமது மதிப்புக்குரிய முதலமைச்சர் அவர்கள் "சுடாமலே நிலைமையைச் சமாளித்துப் பாருங்கள்" என்று போலீசாரின் விளையாட்டுப்போட்டி விழாவின் தலைமையுரையில் கூறியுள்ளார். எனினும் தமிழக அரசின் ஆட்சியில் நான்கு இடங்களில் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது.

பில்லூர்
கோவை
நாகர்கோயில்
கோவை—அகதிகள் முகாம்.

நான்கிடங்களிலும் துப்பாக்கி வெடித்திருக்கிறது; கோரிக்கைக்குப் பதிலாகத் துப்பாக்கியின் குண்டுகள் கிடைத்திருக்கின்றன. அரசிகொடு என்றவர்களுக்கு அதிர்ச்சிதரும் குண்டு, கிடைத்திருக்கிறது. மாணவர்கள், பச்சிளம் பாலர்கள், தங்கள், முன் அநீதம் நடந்தபோது அதனைக்கண்டு மனம் வெந்தவர்கள், உலகம் அறியாச் சிறுவர்கள் அவர்கள் பெற்றதும் துப்பாக்கியின் குண்டு; நாடுவிட்டு நாடுவந்து நலிந்துகிடப்போர் பெற்றதும் குண்டு. குண்டு மழையாகப் பொழிகிறது அரசு.

முதலமைச்சர் "சுடாமலே நிலைமையைச் சமாளிக்கப் பாருங்கள்" என்கிருர். ஆனல் அதிகாரிகளோ சுட்டு நிலைமையை அடக்கப்பார்க்கிருர்கள் கடிது ஓச்சி மெல்ல எறியவில்லை. மெல்ல ஓச்சி கடிது எறிகின்றனர்.

இந்தத் துப்பாக்கிச் சூடுகள் ஏன் நடைபெற்றன என்பதுபற்றி நீதி விசாரணை நடத்தி, நடந்தது இது என்பதனை நாட்டு மக்களுக்கு அறிவித்தார்களானல், மக்கள் மனதிலே ஒரு நம்பிக்கை பிறக்கும். ஆனல் அரசோ நீதி விசாரணை தேவையில்லை என்று கூறி நிர்வாக விசாரணை நடத்துகின்றது. நிர்வாக விசாரணை எத்துணைதான் நடுநிலையோடு நடைபெறுமாயினும், மக்கள் மனதில் அது நம்பிக்கையை உண்டாக்காது. அதனல்தான் நீதியையும் நிர்வாகத்தையும் தனித்தனியே பிரித்துவைத்திருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்தில் இரண்டும்.—நீதியும் நிர்வாகமும்—ஒன்றுகவே

இருந்ததினால் எத்துணையோ தீங்குகள் நிகழ்ந்து விட்டன என்பதை ஊரூருக்கும் எடுத்துச்சொல்லித் தான் நீதியை நிருவாகத்திலிருந்து பிரித்தது. இன்று நியாயம்வேண்டும் என்னும்போது நீதிவிசாரணை நடத்தாமல், நிர்வாகவிசாரணை நடத்துவது விந்தையே!

இந்த நிலைகளை விளக்கி, தமிழகச் சட்டமன்ற எர்க்கட்சித் தலைவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையைக் கீழே தருகிறோம்:-

"நேற்று மாலை, கோவை அருகில் கிழக்குப் பாகிஸ்தான் அகதிகள் குடியிருப்பில், தற்காப்புக்காகப் போலீசாரால் துப்பாக்கிச் சூடு செய்யப்பட்டதாகவும், அதன் காரணமாக ஒருவர் இறந்துவிட்டதாகவும் வந்துள்ள செய்தியறிந்து, திடுக்கிட்டேன்.

தற்காப்புக்காகப் போலீசார், எடுத்த எடுப்பிலேயே துப்பாக்கியால் சுடுவது என்பது இப்பொழுது அன்றாட நிகழ்ச்சி போலாகிவிட்டது.

அண்மைக்காலத்தில், இரண்டு திங்களுக்குள் நான்கு துப்பாக்கிச் சூடுகள் நடந்திருக்கின்றன. பில்லூரில் முதலிலும், பிறகு கோவையிலும், அதன் பிறகு நாகர்கோயிலிலும், அடுத்து இப்போது கோவை அகதிகள் குடியிருப்பிலும் நடந்திருக்கின்றன.

இந்த நான்கு துப்பாக்கிச் சூடுகளும், மேலதிகாரிகளின் அனுமதி பெறாமலே நடந்திருக்கின்றன. துப்பாக்கிச் சூடு செய்யாமலே இந்த நான்கு நிகழ்ச்சிகளையும் சமாளித்திருக்க முடியாதா என்பதுதான் நடுநிலையாளர்களின் கேள்வியாக இருக்கிறது.

கோவையில் அர்ச்சுனன் சுட்டு வீழ்த்தப்பட்டபோதே, 'பொது நீதிவிசாரணை வேண்டும்' என்ற கருத்து சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களாலும், பல்வேறு பொது மன்றங்களாலும், வழக்கறிஞர்கள் சங்கங்களாலும் வற்புறுத்தப்பட்டது.

இக்கோரிக்கைக்கு இன்றைய மாநில அரசு அலட்சியப்போக்கையே பதிலாகத் தந்தது.

விசாரணை இரகசியமாக நடப்பதும், அதுவும் அரசினர் ஆதிக்கத்தின் கீழுள்ள அதிகாரிகளைக்கொண்டே நடப்பதும், 'சுடப்பட்டது நியாயம்தான்' என்று தீர்ப்பு வழங்குவதும், இன்றைய அரசின் வழக்கமான நடவடிக்கைகளாக இருந்து வருகின்றன.

பொதுவான நீதி விசாரணையை, உயர் நீதிபதிகளைக்கொண்டு நடத்தித் தீர்ப்புக் காண ஏன் மாநில அரசு அஞ்சுகிறது என்று தெரியவில்லை!

நிர்வாகத்தை அடக்கி நீதி ஆட்சி செலுத்த வேண்டியது போக, இப்போது நீதியை நிர்வாகம் அடக்கி ஆண்டு வருவது என்பது வருந்தத்தக்கதாகும்.

இனி, எங்கு போலீசாருக்கும் குடிமக்களுக்கும் சிறுதகராறு ஏற்பட்டாலும், அதன் விளைவாகப் போலீசார் துப்பாக்கிச் சூடுதான் தருவார்கள் என்று அஞ்சும் படியான பயங்கர நிலைமை நாட்டில் ஏற்பட்டிருப்பது வேதனை தருவதாகும்.

இந்த நான்கு துப்பாக்கிச் சூடுகளையும் நீதிபதிகளைக் கொண்டு, பொது விசாரணைக்கு விட்டாலொழிய, நீதி நிலைக்காது—நேர்மை துலங்காது — அமைதி நிலவ வழி ஏற்படாது.

பொதுமக்களின் உள்ளக் குமுறலை அறிந்து, மாநில அரசினர், ஆவன செய்ய இனியேனும் முன்வருவார்களா?

ஆவன செய்யச் சொல்லி அரசினரை வற்புறுத்த வேண்டியது பொது மக்களின் நீங்காக் கடமையாகும்.

பொதுமக்கள் தங்கள் கண்டனக்குரலை எழுப்பினால் தான் ஆட்சியாளர்களுக்கு உண்மை தெரியும். நாம் செய்வதை நாட்டிலே நாலுபேர் தட்டிக்கேட்க இருக்கிறார்கள் என்ற அச்சம் தோன்றும். அந்த அச்சமே குடியாட்சி முறையின் பாதுகாவலன். இல்லையேல், எது செய்தாலும் எவர் உளர் கேட்க என்ற எண்ணம் தோன்றிவிடும். பிறகு,


பில்லூர்,
கோவை,
நாகர்கோயில்

என்றுமட்டும் இல்லாமல், நாட்டின் மூலை முடுக்களில் கூட துப்பாக்கி பேசத் தொடங்கிவிடும். துப்பாக்கித் துரைத்தனம், தோன்றிவிடாமலிருக்க, பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டியது அவசியமாகும்.

*

321

கைதி எண் 6342



தம்பி!

இன்று நீக்ரோக்களுக்குக் கொடுமைகள் இழைக்கப்படுகின்றன. பிரச்சினையின் ஒரு பகுதி மட்டுமே தீர்க்கப்பட்டிருக்கிறது. துவக்க நாட்களில், இந்தப் பிரச்சினை குறித்து உலகு துடித்தெழ, இந்தத் தியாகத் தீயில், தூயவர் வீழ்ந்துபட்டிருக்கிறார்.

இதுபோன்ற தியாக வரலாற்று நிகழ்ச்சிகளைப் படிக்கும்போதுதான், நாம் மேற்கொண்ட அறப்போர் காரணமாக ஏற்பட்டிருக்கும் இழப்பும் இன்னலும் மிகச் சொற்பம்-அற்பம்-என்ற மெய்யுணர்வு ஏற்படுகிறது-அதுமட்டுமல்லாமல், பெரிய பிரச்சினைகளைத் தீர்த்திட, எத்தனையோ முயற்சிகள் நடைபெற்றுக வேண்டும் என்ற தெளிவு பிறக்கிறது.

இந்த உணர்ச்சி உள்ளத்தைத் தடவிக் கொடுக்கும் நிலையில், உறங்கச் செல்கிறேன்.

11—4—64

வேதனை தரத்தக்க இழப்புகள் குறித்த பட்டியலில் மற்றும் ஒரு பெயர் இணைக்கப்படவேண்டி நேரிட்டு விட்டதை இன்றைய பத்திரிகை அறிவித்தது; நாச்சியார் கோயில் தவுல் வித்வான் ராகவப் பிள்ளையின் திடீர் மறைவுபற்றிப் படித்து மிக்க வேதனைப்பட்டேன். தமிழக இசை உலகுக்கு இதுவும் மிகப் பெரிய இழப்பு. எனக்குற்ற நண்பர்களில் இவரும் ஒருவர். இவரும், காருகுறிச்சியுடன் காஞ்சிபுரம் எங்கள் இல்லத்திற்கு, திருமணத்தின்போது வந்திருந்து இசைவிருந்தளித்தார். காருகுறிச்சியைவிட இவரை எனக்கு அதிக ஆண்டுகளாகத் தெரியும். மிக்க அன்புடன் பழகுபவர். தவுல் வாசிப்பில் இவருடைய தனித் திறமையை அனைவரும் அறிவர். அவருடைய புலமையை அறிந்த அனைவரும் நெஞ்சம் திடுக்கிடத்தக்க விதமான மறைவு அவருடையது.

நான் சோர்வாகக் காணப்பட்டதை எண்ணியோ என்னவோ, இங்கு என்னுடைய நண்பர்கள், என்னுடைய பயண அனுபவங்களைப்பற்றிச் சொல்லச் சொல்லிக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அரித்துவாரம், டேராடன், சாரன்பூர், காசி, சாரநாத், லக்னோ, பாட்னா, கல்கத்தா ஆகிய பல இடங்களுக்குச் சென்று வந்ததுபற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். எத்தனை பெரிய பெரிய நகர்கள் போய்வந்தாலும், சென்னை போல, மனதுக்கு நிம்மதி தரத்தக்க இடம் இல்லை என்ற என் எண்ணத்தையும் கூறினேன். சென்னை மேலும் எழில் நகராவதற்காக, மேற்கொள்ளவேண்டிய திட்டங்கள் குறித்தும் பேசிக்கொண்டிருந்தோம்.

கடந்த நாலைந்து நாட்களாகவே, கையில் வலி குறைந்திருந்தாலும், மிகவும் பளுவாக இருப்பது போன்ற ஒரு உணர்ச்சி. இதன் காரணமாக, நூற்பு வேலை செய்யவில்லை. இன்றுதான் மறுபடியும் நூற்பு வேலையில் சிறிது நேரம் ஈடுபட்டேன்.

என்ன காரணத்தினாலோ, நாலைந்து நாட்களாக, நாங்கள் இருக்கும் பகுதியின் முன்வாயில் இரும்புக் கம்பிக் கதவைப் பூட்டியே வைக்கிறார்கள். சிறையில், முறைகள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்குக் காரணம் புரிவதில்லை; கேட்டுத் தெரிந்துகொள்ளவும் முடிவதில்லை.

பல செய்திகளால் ஏற்பட்டிருந்த மனவருத்தத்தைப் போக்குவதுபோல, இன்று மாலை பரிமளம் என்னைக் காண வந்திருந்தான். இன்றுடன் பரிட்சை முடிவுற்றதாகவும் சொன்னான். உடன் யாரும் வரவில்லை, ஆகவே நீண்ட நேரம் பரிமளத்திடம் குடும்ப விஷயமாகவும், பொது விஷயங்கள் பற்றியும் பேசிக் கொண்டிருந்தேன். நான் இளைத்துக் காணப்படுவதாகச் சொன்னான்-எனக்கு அப்படி ஒன்றும் தோன்றவில்லை.

ஆப்பிரிக்க பூபாகத்தைப்பற்றி ஆங்கிலேயர்கள், 'விநோதமான' முறையில், கதைகள் எழுதுவது வாடிக்கை. அங்கு பூர்வீகக்குடிகள் மனிதமாமிசம் தின்பவர்கள், மாய மருத்துவக்காரரிடம் சிக்கிக்கிடப்பவர்கள் என்றெல்லாம் எழுதுவது வழக்கம். பிறநாடுகளைப் பிடித்தாட்டும் ஏகாதிபத்திய உணர்ச்சிக்கு உணவளிக்க இதுபோல எழுதத்தூண்டப்பட்டார்கள் என்று எண்ணுகிறேன். இத்தகைய முறையில் எழுதப்பட்டுள்ள ஒரு ஆங்கில ஏடு படித்தேன். எந்த நோக்கத்துக்காக எழுதப்பட்டிருந்தபோதிலும், அதைப்படிக்கும் போது, ஆப்பிரிக்கபூபாகத்தின் இயற்கைச் செல்வம் எவ்வளவு அளவு கடந்து இருக்கிறது என்பதைத்தான்

உள்ளபடி உணர முடிகிறது. அந்த இயற்கைச் செல்வத்தை, விடுதலை பெற்ற ஆப்பிரிக்க நாடுகள் தக்க முறையில் பயன்படுத்தினால், இந்த நூற்றாண்டு ஆப்பிரிக்க மக்களின் புதுவாழ்வு நூற்றாண்டாகும் என்று தோன்றுகிறது.

12—4—64

காக்கை குருவிகளெல்லாம், எங்களைக் கேலி செய்வதுபோலக் கூச்சலிட்டு, மரங்களிலே தாவிக் கொண்டிருந்தன — இன்று 5-30க்கே, எங்களை அறைகளிலே போட்டுப்பூட்டிவிட்டார்கள். ஞாயிற்றுக்கிழமை வெளியே மஞ்சள் வெயில் அடித்துக்கொண்டிருக்கும் நிலையில், நாங்கள் அறைக்குள் அனுப்பப்பட்டோம். உள்ளே போவதற்கு முன்பு, ஒருமணி நேரம் வரையில், மிகப் பயங்கரமான கூச்சல்-கதறல்-நாங்கள் இருக்கும் பகுதிக்குப் பக்கத்துப் பகுதியில்; வேட்டையாடப்பட்ட மிருகம், வெகுண்டெழுந்து கதறுவதுபோன்ற ஒரு கூச்சல். காரணம் கேட்டோம். ஒரு ஆயுள்தண்டனைக் கைதிக்கு, மனம் குழம்பிப்போய் இவ்விதம் கூச்சலிடுவதாகச் சொன்னார்கள். உட்புறத்தில் இதுவரை இருந்து வந்தவனும். கதறிக் கதறிக் களைத்துப்போய் பிறகு பேச்சற்றுக்கிடக்கும் நிலை மேலிட்டுவிட்டது என்று எண்ணுகிறேன்.

இன்று பிற்பகல், சிரவணபெலகோலாவில் உள்ள கோமதீஸ்வரர் சிலைபற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். அங்கு அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் ஒருவிழா பற்றி இன்றைய பத்திரிகையில் செய்தி வந்திருந்தது. எனவே நண்பர்கள் அதுபற்றிக் கேட்டார்கள் — நான் அங்குச் சென்று வந்த நிகழ்ச்சிபற்றிக் கூறினேன். அதைத் தொடர்ந்து, விஜயநகரம் ஹம்பி இடிபாடுகள் பற்றிப் பேச்சு எழுந்தது. அங்கு நான் கண்டவைகள் பற்றியும் கூறினேன்.

சென்ற ஆண்டு நான் சிரவணபலகோலாபற்றி எழுதியதைப் படித்துவிட்டு, தான் போய்ப் பார்த்து விட்டு வந்ததாக, காஞ்சீபுரம் கே. டி. எஸ். மணி என்னிடம் கூறினார்.

போகப்போகிறார்களோ இல்லையோ, இங்கு இந்த நிகழ்ச்சிகளைப்பற்றி நான் கூறியதைக் கேட்ட நண்பர்கள், பல இடங்களுக்குச் சென்றுவரப் போவதாகப் பேசிக்கொள்கிறார்கள்.

அரக்கோணம் ராமசாமி, தனது தொகுதியில் உள்ள மகேந்திரவாடி என்ற ஊரையும், ஏரியையும் நான் அவசியம் வந்து பார்க்கவேண்டும்—அந்த இடம் பல்லவர்கள் காலத்தது என்று கூறினார். வருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறேன்.

ஷேக்அப்துல்லா நிலைமைபற்றியும், கம்யூனிஸ்டு கட்சியின் பிளவுபற்றியும், இங்கு நண்பர்கள் திகைப்புடன் பேசிக்கொண்டுள்ளனர்.

13—4—64

நேற்றுபோலவே இன்று மாலையும் புத்தாண்டுக்காக விடுமுறையாம் — விடுமுறை என்றால், கைதிகளுக்கு மாலை ஆறுமணிக்குள் கூடு, என்பது நிலைமை.

இன்று காலையிலேயே, கவலை தரும் செய்தி — ஆசைத்தம்பி, அறிவழகன் தோற்றுவிட்டதாக. அவர்கள் தேர்தலில் ஈடுபட்ட செய்தி அறிந்தபோதே கவலைப் பட்டேன் — அந்தத் தேர்தல் முனைகள் (உள்ளாட்சி மன்றங்கள் தொகுதி, பட்டதாரிகள் தொகுதி) நமது கழகத்துக்குப் போதுமான தொடர்பு உள்ளவைகள் அல்ல. அந்த முனைகளில் செல்வாக்குப் பெறும் வழி முறைகள், நமக்கு இன்னும் சரியானபடி பிடிபடவில்லை. எனவே, அந்தத் தொகுதிகளில் கழகத் தோழர்கள் தேர்தலில் ஈடுபடுவது, மிகமிகத் துணிகரமான முயற்சி என்று கூறவேண்டும். என்றாலும், எப்படியும் அந்த முனைகளிலும் நாம் ஒருநாள் இல்லாவிட்டால் மற்றோர் நாள் ஈடுபடத்தானே வேண்டும், இது, முதல் முயற்சி என்ற அளவில் திருப்திப்பட்டுக்கொள்ள வேண்டும் என்று நண்பர்களிடம் கூறினேன்.

இந்த இரு தொகுதிகளிலும், அதிலும் குறிப்பாக, உள்ளாட்சி மன்றத் தொகுதிகளில் வாக்காளர்களாக உள்ளவர்களில் எந்தக் கட்சியினர் அதிகம் என்று நண்பர்கள் கேட்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள், ஆளுங் கட்சியைச் சேர்ந்துவிடுபவர்கள்—ஜஸ்டிஸ் கட்சி ஆளுங் கட்சியாக இருந்தபோது, அதிலே இருந்தனர்; இப்போது காங்கிரசில் உள்ளனர் —அவர்கள் மட்டுமல்ல, 'பெரிய புள்ளிகள்' என்பவர்களே அவ்விதம்தான் என்று நான் கூறினேன். மாவட்ட வாரியாக, எந்தெந்தப் பெரிய புள்ளிகள், முன்பு ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தவர்கள் இப்போது காங்கிரசில் சேர்ந்துள்ளனர் என்பதுபற்றி நண்பர்கள் கணக்கெடுத்தனர். இதழில், செட்டிநாட்டரசர் முத்தையய செட்டியார், சென்னை மேல்சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்கிற செய்தி வந்திருக்கிறது என்று அன்பழகன் சுட்டிக் காட்டினார். அவருடைய தம்பி இராமநாதன் செட்டியார், டில்லி பாராளு மன்ற உறுப்பினர்—காங்கிரஸ் கட்சி; அதுகூட வேடிக்கை இல்லை, ஜஸ்டிஸ் கட்சித் தலைவராக விளங்கிய 'பொப்பிலி ராஜா'வின் மகன், பாராளு மன்ற உறுப்பினர்; காங்கிரஸ் கட்சி; என்று நான் கூறினேன். பெரிய புள்ளிகளின் போக்கு இதுதான் என்று நண்பர்கள் கூறி வருந்தினர்.

நேற்றும் இன்றும், 'சாடர்லீ சீமாட்டியின் காதலன்' என்ற புத்தகம், ஆபாசமானது என்று தடை செய்யப்பட்டதை ஒட்டி தொடரப்பட்ட வழக்கு பற்றிய புத்தகம் படித்துக்கொண்டிருந்தேன். புத்தகத்தின் கருத்து, நடை, இரண்டுமே, நம்மைத் தூக்கிவாரிப் போடக்கூடியது. சாடர்லி சீமாட்டி, மணமானவள்—கணவன், உலகப் பெரும்போரில் குண்டடி பட்டதால்,

இடுப்பிலிருந்து செயலற்ற உடல்நிலை பெற்றுவிடுகிறான். சாடர்லி சீமாட்டி, சீமானுடைய நண்பனிடமும், பிறகு, தோட்டக்காரனிடமும் தொடர்பு கொள்கிறாள். இதிலே தோட்டக்காரனிடம் கொண்ட தொடர்பு தொடர்கிறது—சீமாட்டிக்கு அவனிடம் இணைந்துவிட வேண்டும் என்ற துணிவு பிறக்கிறது; அவனும் மணமானவன்; முரடன். இருவரும் தத்தமது 'விவாகத்தை' விடுதலை செய்துகொண்டு, திருமணம் செய்துகொண்டு கண்காணா இடம் சென்று வாழவேண்டும் என்று முடிவு செய்கிறார்கள். இது கதை. பச்சை பச்சையாகவும், புட்டுப் புட்டுக் காட்டுவதாகவும், ஆபாசமான சொற்களைக் கொண்டதாகவும், நடை.

இந்த ஏடு, ஆபாசமானது, படிப்பவரின் மனதைக் கெடுத்து, ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் பாழாக்கி விடும், ஆகவே இது தடை செய்யப்பட வேண்டும் என்பது, வழக்கு.

வழக்கு தொடுத்தது, பிரிட்டிஷ் அரசு. புத்தகம் வெளியிட முன்வந்தது, பெங்குவின் புத்தக நிலையத்தார்.

இந்த நூலின் ஆசிரியர் டி. எச். லாரன்ஸ் என்பார் இலக்கியத் துறையில் வித்தகர் என்ற விருது பெற்றவர். அவருடைய கதைகள்—கட்டுரைகள்—கவிதைகள், இலக்கியச் செறிவுள்ளன என்பதற்காக, பல பல்கலைக் கழகங்களில் பாட நூற்களாகவும், ஆராய்ச்சிக்குரிய நூற்களாகவும் இடம் பெற்றுள்ளன. இந்த நூற்றாண்டின் இணையில்லா இலக்கியப் பேராசிரியர் வரிசையில், லாரன்சுக்குச் சிறப்பிடம் இருக்கிறது.

லாரன்சின் மேதைக்கு ஒரு எடுத்துக் காட்டாக, மற்றொன்றும் கூறலாம். அவருடைய நூற்களைப் பற்றியும், அவருடைய திறமை பற்றியும் மதிப்பிட்டு எழுதப்பட்டுள்ள புத்தகங்கள் மட்டும் 800!

லாரன்சின் புகழ், ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. சாடர்லி சீமாட்டி எனும் ஏட்டின் கருத்தும் நடையும், படிப்போருக்கு ஒரு குமட்டலைத் தருவதாக உள்ளது.

எனினும், வழக்கு நடைபெற்று, புத்தகம் வெளியிட்டதிலே குற்றம் ஏதுமில்லை, என்று தீர்ப்பளிக்கப் பட்டிருக்கிறது.

ஆபாசமானது என்று கருதத்தக்க விதமாக, கருத்தும் நடையும் இருப்பினுங்கூட, பெரிய இலக்கிய மேதையான லாரன்சு, அந்த ஏட்டின் மூலம், மண வாழ்க்கை தூய்மையானது, தேவையானது, கனிந்திருக்க வேண்டியது, என்ற பண்பைத்தான் விளக்க முற்பட்டிருக்கிறார், என்ற காரணம் ஒப்புக்கொள்ளப் பட்டு, தீர்ப்பு அளிக்கப்பட்டது. இந்த ஏடு பற்றி, பல்கலைக் கழக இலக்கியப் பேராசிரியர்கள், நூலாசிரியர்கள், மனோதத்துவ ஆசிரியர்கள், மார்க்கத் துறை வித்தகர்கள், கல்விக்கூட அதிபர்கள், தமது கருத்தினைச் சான்றுக அளித்துள்ளனர்.

வழக்கிலே, இருதரப்பு வழக்கறிஞர்களும் வாதாடிய முறை மிக நேர்த்தியாக அமைந்திருக்கிறது.

படிப்போரை மகிழ்ச்சியும் பயனும் கொள்ளச் செய்யும் விதமான ஏடு, இந்த வழக்கு பற்றிய ஏடு.

எல்லாவற்றையும் விட, என் மனதைப் பெரிதும் ஈர்த்த பகுதி, மிகப் பெரிய இலக்கிய மேதையான லாரன்சு இதுபோல எழுதியுள்ளாரே என்பதற்காக, பேனா பிடித்தவனெல்லாம் இது போன்ற கதையையும், நடையையும் எழுத முற்பட்டுவிடக்கூடாது என்று லாரன்சின் ஏட்டுக்காக வாதாடிய வழக்கறிஞரே அறிவுரை கூறியிருக்கும் பகுதிதான்.

வழக்கு ஆறு நாட்கள் நடைபெற்றது—1960-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் இருபதாம்நாள் துவக்கம்.

எந்த ஏடு பற்றி வழக்கு நடைபெற்றதோ, அந்த ஏட்டின் ஆசிரியரான லாரன்சு இப்போது இல்லை—அவர் மறைந்து ஆண்டு முப்பது ஆகிறது.

14—4—64

வழக்கமான, 'கைதிகளைப் பார்வையிடும் நிகழ்ச்சி' இன்று. நாங்களும் எதுவும் பேசுவதில்லை. அதிகாரிகளும் எங்களை ஒன்றும் கேட்பதில்லை. கைதி உடையில், வரிசையாக நிற்கிறோம்—அதிகாரிகள் கைதிகளைப் பார்வையிடுகிறார்கள்—இது ஒவ்வொரு கிழமையும். இந்த நிகழ்ச்சி பயனுள்ளதாவதற்கு ஏதேனும் மாற்றம் ஏற்படுத்தலாம்போல் தோன்றுகிறது. ஒவ்வொரு நாளும், எந்த அதிகாரிகள், கைதிகளைப் பார்க்கிறார்களோ, அவர்களேதான், அன்றும் பார்க்கிறார்கள். சிறையின் நிலைமை, கைதிகளின் நிலைமை இவற்றை அன்று, ஊரிலுள்ள பொறுப்புள்ள சிலருக்குக் காட்டும் முறையில் இந்த நிகழ்ச்சியை மாற்றி அமைத்தால், ஓரளவுக்குப் பயன் ஏற்படலாம்—மாநகராட்சி மன்றத் தலைவர்—மேயர்—இந்த நிகழ்ச்சியில் ஒருமுறை கலந்து கொள்வது, மற்றோர் முறை சுகாதாரத் துறை பெரிய அலுவலர்கள் கலந்து கொள்வது, மற்றோர் முறை, விடுதலையான கைதிகளின் நல்வாழ்வுக்காக உள்ள அமைப்பைச் சேர்ந்தவர்கள் கலந்துகொள்வது என்று இவ்விதமாக ஏதாகிலும் மாற்றம் ஏற்படுத்துவது தேவை என்று நினைக்கிறேன்.

பொழுதுபோக்காக 'ஓவியம்' வரையலாம், அதற்கான தீட்டுக்கோல், கலவைகள் தருவிக்கிறேன் என்று சுந்தரம் சொன்னார்—அவர் கேட்டுக்கொண்டபடி எடுத்துவந்தார்கள்—ஆனால் அவைகளை அனுமதிக்க முடியாது என்று சிறை அதிகாரிகள், திருப்பி அனுப்பிவிட்டனர். இவ்விதம் பொருளற்ற கட்டுத் திட்டங்கள் கையாளப்படுகின்றன. கைதிகளை, இவ்விதம் நடத்தினால்தான், அவர்களுக்கு தண்டனையை அனுபவிக்கிறோம் என்ற உணர்ச்சி ஏற்படும் என்ற ஒரு பழையகாலக்கருத்துதான் இன்றும் அமுல்செய்கிறது. அரசியல் கிளர்ச்சி காரணமாகச் சிறை புகுந்துள்ளவர்களுக்கும் இப்படி வீணான கட்டுத்திட்டம் தேவைதானா, என்று மேல்மட்டத்தில் எண்ணிப் பார்ப்பதாகவே தெரியவில்லை. நன்கு பதப்படுத்தப்படாத பஞ்சு—அதை நூற்பதிலேயே, எத்தனை நேரம்தான் காலத்தை

ஓட்டமுடியும்? தோட்ட வேலையாவது செய்யலாம், தச்சு வேலையாவது பழகலாம்—என்றெல்லாம் நண்பர்கள் கூறிக்கொள்கிறார்கள்; சலிப்பு, நேரக்கேடு. பத்திரிகைகளின் மூலம், நமது கழகத் தோழர்கள், என்னென்ன விதமாகப் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள் என்பதை அறிந்து அகமகிழ்கிறோம்–அதேபோது, உடன்இருந்து பணியாற்ற முடியவில்லையே என்ற வருத்தம் வாட்டுகிறது. இன்று நண்பர்கள், மதுரை, காஞ்சிபுரம் ஆகிய இடத்திலே வழக்குகள் முடிவு பெருததால், காவலிலே மாதக்கணக்காக அடைபட்டுக் கிடக்கும், மதுரை முத்து, கோவிந்தசாமி போன்ற நண்பர்கள் பற்றி மிகுந்த கவலை தெரிவித்தார்கள். தூத்துக்குடியில் நடைபெற்றதுபோல, விரைவாக, வழக்கு, நடத்தப்பட வேண்டும் என்று எங்களைப் போலவே, பலரும் கருதத்தான் செய்வார்கள்.

அறுபது வயதுக்கு மேலான முதியவர்—குடும்பம் நடத்தவேண்டிய நிர்ப்பந்தத்திலிருந்து விடுபட முடியாத நிலையில், ஊரூராகச் சுற்றி, சாமான்களை விற்பனை செய்யும் வேலையைச்செய்து, உடல் இளைத்து, உள்ளம் வாடி, ஆவி சோர்ந்துபோகும் கட்டத்தில் இருக்கிறார். இரண்டு பிள்ளைகள்—முப்பது, முப்பத்தைந்துவயதில். குடும்பத்தை நடத்திச்செல்லும் பொறுப்பில் அவர்கள் இருவரும் வெற்றிகாணவில்லை. தகப்பனே பிள்ளைகள், மணிமணியானவர்கள், குடும்பத்தை மிக மேல் நிலைக்குக் கொண்டுவரத்தக்க அறிவாற்றல் படைத்தவர்கள் என்று நம்புகிறார். அந்த நம்பிக்கை சிதையும் நிகழ்ச்சி ஏற்படுகிறது—மனமுடைந்து மாண்டுபோகிறார்.

நெஞ்சை உருக்கும்விதமாக எழுதப்பட்டுள்ள, இந்தக் கருத்து விளக்க ஆங்கில ஏடு ஒன்று படித்தேன்.

இதுபோல், தமிழகத்தில், பல்லாயிரக்கணக்கில் தகப்பன்மார்கள்தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமைகளைப்பற்றி எண்ணிக்கொண்டேன். நொந்த உள்ளத்துடன், படுத்துப் புரண்டபடி இருந்தேன்—நெடுநேரம். இன்றிரவு தூக்கம் பிடிக்கவில்லை.

மகன் உதவாக்கரையாகிவிட்டான் என்று மனம் நொந்து வெகுண்டு, தகப்பன், மகனை ஏசுகிறான். மகன், கண்ணீர் சிந்துகிறான். அந்தக் கண்ணீரைக் கண்டதும், தகப்பனுக்குக்கோபம் எங்கோ பறந்து போய்விடுகிறது. என்மகன் அழுகிறான்! எனக்காக அழுகிறான். என் நிலைமைகண்டு அழுகிறான்! என்னிடம் அவ்வளவு அன்பு, என் மகனுக்கு—என்று கூறி உருகிப்போகிறான். இரவு, பல முறை, இந்தக் கட்டத்தைப்பற்றிய நினைவு, எனக்கு. அந்தக் குடும்பமே கண் முன் நிற்பதுபோல ஒரு எண்ணம். அந்தக் குடும்பமா! அதுபோன்ற குடும்பங்கள்.

15—4—64

இங்குள்ள சிறை அதிகாரிகளிலே சிலர், மதுரைக்கு மாற்றப்படுகிறார்கள் என்றும் புதிய அதிகாரிகள் இங்குவர இருப்பதாகவும், பேச்சுகிளம்பிற்று. மருத்துவர்கூட மாறுகிறார்—இங்கு இருப்பவர், தஞ்சைக்குச் செல்கிறார். இன்று புதிய டாக்டர், எங்கள் பகுதிக்கு வந்திருந்தார். இவர் நான் 1939-ல் சிறையில் இருந்த போது இங்கு டாக்டராக இருந்தவர்—பல்வேறு இடங்களில் வேலைபார்த்துவிட்டு, மீண்டும் இங்கு வந்திருக்கிறார். எனக்கு அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை; அவர் என்னிடம் பேசியபிறகுதான் எனக்குப் புரிந்தது.

இங்கு நண்பர்களுக்கு, சிறுசிறு நலிவுகள். மதிக்கு பாதத்தில் சுளுக்குபோல வலி—எலும்பு முறிவோ என்று சந்தேகம்–கட்டுபோடப்பட்டிருக்கிறது. சுந்தரத்துக்குக் கண்வலி. அன்பழகனுக்குக் காலில்வலி. இராமசாமிக்கு வயிற்றில்வலி, பார்த்தசாரதிக்கு இரத்த அழுத்தம், பொன்னுவேலுவுக்கு இருமல், இப்படி. சிலருக்கு மாத்திரை, சிலருக்கு மருந்து என்று மருத்துவரும் தந்தபடிஇருக்கிறார். எல்லா மருந்துகளும் ஒரேமாதிரியாகவே இருப்பதாக நண்பர்கள் பேசிக்கொள்கிறார்கள். நான் இரவு சாப்பிடுவதை நீக்கிவிட்டேன்—ஏதாகிலும் சிற்றுண்டிதான் உட்கொள்வது. அதுவே ஜீரணமாவது கடினமாக இருக்கிறது; அதற்கான மருந்து, நாளுக்கு இருவேளை உட்கொள்ளுகிறேன். கைவலிக்கு, கடுகு எண்ணெய் தேய்த்துக்கொள்கிறேன்—சுந்தரம் மெத்த அக்கறையுடன் ஒவ்வொரு நாளும், பிற்பகல் மூன்று மணிக்கு, தைலம் தேய்த்துவிடுகிறார். ஓரளவு பலன் இருப்பதாகத் தெரிகிறது. இதற்குள் நண்பர் அன்பழகன், பிண்டத்தைலம் என்று மற்றோர் மருந்து தருவித்திருக்கிறார். சிறை அதிகாரி ஒருவர் தென்னமரக்குடி எண்ணெய்தான் இந்த வலியைப் போக்கும் என்று கூறினார்—மாயவரம் சென்று வரும்போது அந்தத் தைலத்தை வாங்கிக்கொண்டு வரும்படி, பரிமளத்துக்குச் சொல்லி இருக்கிறேன். கையோ, இன்னமும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் தூக்க முடியாதபடிதான் இருக்கிறது.

இன்று, காஞ்சிபுரம் மணி, திருவேங்கிடம், கிளியப்பன் ஆகியோரைக் காண அவரவர்களின் வீட்டினர் வந்திருந்தனர். அதிகமான கலக்கம் காட்டவில்லை என்று கூறினார்கள். எல்லோரும் களிப்பாகவே இருக்கிறார்கள்.

16—4—64

தொகுதிகள் திருத்தி அமைக்கப்படுவதற்காக அமைக்கப்பட்டுள்ள குழுவில் மதி ஒரு உறுப்பினர்—குழு, மே பதினேராம் நாள் கூடுகிறது, அதற்குச் சென்று கலந்துகொள்ளத்தக்கவிதமாக, விடுதலை நாள் அமையுமா என்பதை அறிந்துகொள்வதற்காக மதியும் பார்த்தசாரதியும் இன்று சிறை மேலதிகாரியைக் காணச்சென்றனர். சிறையில் வேலை செய்வதற்காக, மாதத்திற்கு நான்கு நாட்கள் கழிவு உண்டு; இது மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட தண்டனையாக இருந்

தால்தான்—அதிலும் கடுங்காவல் தண்டனையாக இருக்கவேண்டும்.

சிறை மேலதிகாரியைக் காணச்சென்றதில் ஒரு திடுக்கிடத்தக்க தகவல் தெரியவந்தது. தொத்தா மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கும் முறையில் இங்குள்ள நமது கழகத் தோழர்கள் ஒரு நாள் உண்ணு விரதம் இருந்தனர். சிறை மேலதிகாரிகள் மிகக்கோபம் கொண்டுவிட்டனர். ஐயா! உங்கள்பேரில் கோபித்துக் கொண்டோ, சிறை நிருவாகத்தின்மீது அதிருப்தி கொண்டோ நாங்கள் உண்ணுவிரதம் இருக்கவில்லை, இது எங்கள் குடும்பத்திலே நேரிட்டுவிட்டதுபோன்ற ஒரு இழப்புக்காக வருத்தம்கொண்டு நடத்தப்படும் ஒரு மரியாதைச் சடங்கு என்றெல்லாம் தோழர்கள் விளக்கம் கொடுத்துள்ளனர். அதுபோல எழுதிக்கொடுக்கச் சொல்லியும் அதிகாரிகள் பெற்றுக்கொண்டனர். என்ருலும் உண்ணுவிரதம் இருந்தது குற்றம்; தண்டிக்கத் தக்கது என்று கூறி, இரண்டு வாரங்கள் யாரும் வந்து பார்க்க அனுமதி கிடையாது என்று தெரிவித்துவிட்டதுடன், கழிவு நாட்களில் நாலுநாட்களைக் குறைத்து விட்டனர்.

இந்தத் தகவலைக் கேட்டுக்கொண்டுவந்தனர், மேலதிகாரியிடமிருந்து. பட்டதும் படாததுமாக, மேலதிகாரி, மே முதல் வாரத்தில் உங்களில் சிலரை அனுப்பி விடுகிறேன் என்று கூறியிருக்கிறார். எத்தனை நாட்கள் 'கழிவு' தரப்படும், எந்தத் தேதியில், விடுதலை! என்பதை மூடுமந்திரமாகவே வைத்துக்கொண்டிருப்பதில், இவர்களுக்குப் பிரமாதமான விருப்பம் இருப்பது தெரிகிறது. கழிவு நாட்கள் தருவதிலேயும், நாம் அறிந்து கொள்ளத்தக்க திட்டவட்டமான ஒரு முறை கையாளப் படுவதாகவும் தெரியவில்லை. இந்த முறையை இங்குள்ள கைதிகள் 'மார்க்கு' என்று சொல்லுகிறார்கள்—இதிலே பலரகம் இருக்கிறதாம், பேசிக்கொள்கிறார்கள், ராணிமார்க்கு என்கிறார்கள்; வேலைமார்க்கு என்கிறார்கள்; துரைதரும் மார்க்கு என்கிறார்கள். எல்லாம் 'கைதி' பாஷை. துரை என்றால் சிறை மேலதிகாரி.

கைதிகள் இங்கு நடந்துகொள்ளும் முறையின் படி, சுறுசுறுப்பு, அடக்க ஒடுக்கம், ஆகிய முறையின் படி, வெளியே வேலைகளிலே ஈடுபடும்போது நடந்து கொள்வார்களா என்பது சந்தேகந்தான்.

தெரியாமல் வந்துவிட்டேன்—விரோதி சிக்க வைத்துவிட்டான் — விதிவசம் — என்று கைதிகள் உருக்கமாகப் பேசுகிறார்கள், ஆனால் சிலர், திரும்பத் திரும்ப, சிறை வந்தபடி இருக்கிறார்கள். இங்கு எங்கள் பகுதியில் வேலைசெய்யும் கைதிகளை மேற்பார்வை பார்க்க ஒரு கைதி — மேஸ்திரி என்ற பெயருடன். விடுதலை ஆகிப் பத்து நாட்கள்கூட ஆகவில்லை, இன்று மீண்டும் சிறைக்குவந்து சேர்ந்துவிட்டதாக நண்பர்கள் கூறுகிறார்கள். விடுதலைக்கு முன்பு, இனி 'ஜென்ம ஜென்மத்துக்கும்' இங்கு வரமாட்டேன்; பட்டது போதும்; புத்தி வந்துவிட்டது என்றெல்லாம் சொன்ன ஆசாமி, எண்ணி பத்துநாள் ஆவதற்குள் மறுபடியும் 'உள்ளே' வந்தாகிவிட்டது.

இங்கே, சிறையில், இப்படி வந்துபோகிறவர்களை, விக்கிரமாதித்தன் பரம்பரை என்றும், ஆயுள் தண்டனைக் கைதிகளை இராமன் பரம்பரை என்றும், வேடிக்கையாகப் பேசிக்கொள்கிறார்கள் — விக்கிரமாதித்தன் நாடாறுமாதம் காடாறுமாதம் அல்லவா! இராமன் பதினைந்து ஆண்டுகள் வனவாசம் அல்லவா!!

17—4—64

இன்று, இளங்கோவனுடன் கௌதமனும், கே. ஆர். இராமசாமியும் என்னைக் காணவந்திருந்தனர். என்னைச் சிறையில் கௌதமன் வந்துபார்ப்பது, இதுதான் முதல் முறை. பரீட்சை எப்படி எழுதினாய் என்று கேட்டேன்; நன்ருகவே எழுதி இப்பதாகச் சொன்னான். பரிமளம் மாயவரம் சென்றிருப்பதாகவும், அடுத்தவாரம் வரக்கூடும் என்றும் இளங்கோவன் கூறினான். இராமசாமி, சோர்வாகக் காணப்பட்டார். சட்டசபை படிப்பகத்திலிருந்து சில புத்தகங்களைப் பெற்றுக்கொண்டு வந்து கொடுக்கும்படி, இராமசாமியிடம் கூறி அனுப்பினேன்.

இன்று தையற்கலை ஆசிரியர் கே. பி. சுந்தரமும், தமிழ்ப் பேராசிரியர் அன்பழகனும், சிலப்பதிகார காலத்தில், தையற்கலை இருந்திருக்கிறதா என்பதுபற்றி, சுவையுடன் பேசலாயினர். துன்னகாரர் என்றிருப்பது தையற் கலைஞர்களைக் குறிப்பது ஆகும் என்று அன்பழகன் விளக்கினர், இன்று உள்ளதுபோன்ற, வெட்டு முறைகளும், விதவிதமான, 'பாணிகளும்' அப்போது இருந்ததாக ஆதாரம் இல்லை என்பது சுந்தரத்தின் வாதம். நான் பொதுவாக ஒன்று கூறினேன்: மேலைநாடுகளில், அவ்வப்போது இருந்த நிலைமைகள் பழக்க வழக்கங்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றை முறையாகத் தொகுத்து எழுதும் பழக்கம்உண்டு, அதனால், மிகப் பழங்காலத்துத் தகவல்களைக்கூடத் தெரிந்துகொள்ள வழி கிடைக்கிறது; நம்மிடம் அந்தப் பழக்கம் வெகு காலமாக இல்லை, அதனால், எத்தனையோ தகவல்கள் மறைந்துபோய்விட்டன, என்று குறிப்பிட்டேன்.

ஆனந்தரங்கம் பிள்ளையின் குறிப்புகள் பற்றிப் பேச்சு வந்தது. புதுவை ஆனந்தரங்கம் பிள்ளையின் குறிப்பு, இங்கே சிறை படிப்பகத்திலே இருந்தது; மும்முனைப் போராட்டத்தின்போது சிறையில், நாவலர் அந்தப் புத்தகத்தைப் படித்து, மன்றத்தில் சில கட்டுரைகள்கூட எழுதினர் என்பதை நான் கூறினேன்.

20—4—64

இரண்டு நாட்கள் குறிப்பு எழுதத்தக்க நிகழ்ச்சிகள் இல்லை; வழக்கமான, சுவையற்ற அன்ருட நடவடிக்கைகள். பேச்சும், சோர்வுடன்; காரணம், அருப்புக் கோட்டை. இங்கு நான் துவக்க முதலே, ஐயப்பட்டுக்

கொண்டிருந்தேன். முடிவும் அதுபோலவே ஆகிவிட்டது. தேவருடைய மறைவுக்குப் பிறகு, அந்தப் பகுதியைக் காங்கிரசுக்கு ஆக்கிக்கொள்ள வேண்டுமென்ற காங்கிரஸ் திட்டம் பலனளித்துவிட்டது. என்ருலும், பத்திரிகைச் செய்தியைக் கூர்ந்துபார்த்தால், சாத்தூர் சிவகாசி தொகுதிகளை முதுகுளத்தூர் அருப்புக் கோட்டை தொகுதிகளுடன் இணைக்காமலிருந்தால் நிலைமை வேறுவிதமாகி இருக்கும் என்பது புரியும். நண்பர்கள், இதுபோல, மனதுக்கு ஒருவிதமான திருப்தி வருவித்துக் கொண்டார்கள். என்னைப் பொருத்தவரையில், இதுபோலத் திருப்தியை வருவித்துக் கொள்வதிலே பலன் இல்லை; நியாயமுமாகாது என்று தோன்றுகிறது. பல இடங்களில், காங்கிரஸ் தனது பிடியை இழந்துவிடாதிருக்க, பலமானதோர் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது; இந்த முயற்சி சிலஇடங்களில் வெற்றியைக் கொடுக்கிறது. எனவே, காங்கிரசின் ஆதிக்கத்தை அகற்றும் முயற்சி தீவிரமாக்கப்பட வேண்டும் என்ற பாடத்தைத்தான் அருப்புக்கோட்டை தோல்வி மூலம் நாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன்.

படித்து, குறிப்பெடுக்கத்தக்க புத்தகங்கள் எதுவும் கிடைக்கவில்லை. வெறும் பொழுதுபோக்குக்கான கதைப் புத்தகங்கள்தான் தரப்பட்டன. அவைகளையும் படித்து முடித்தேன்—சிறையிலே படிக்காவிட்டால் வேறு எங்குதான் அவைகளைப் படிக்க முடியும்! இதிலேயும் ஒரு பலன் இருக்கத்தான் செய்கிறது. அமெரிக்க நாட்டு மக்கள், எத்தகைய மனப்போக்கில் விருப்பம் காட்டுகிறார்கள் என்பதை, இந்தக் கதைகள் காட்டுகின்றன. காட்டுமிராண்டிகளிடம் இருந்த நாட்டை, நாகரிகப்படுத்தும் புனிதப் பணி புரிந்தனர் அமெரிக்கர்கள் என்று இன்றுள்ள அமெரிக்க இளைஞர்கள் எண்ணிப் பெருமைப்பட்டுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடனேயே பெரும்பாலான கதைகள் புனையப்பட்டுள்ளன.

பண வருவாய் அதிகமாகி உள்ள அமெரிக்காவில் காமக் களியாட்டங்கள் மிகுந்துவிட்டிருக்கிறது என்பதையும் சில ஏடுகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஆனல் அத்தகைய வாழ்க்கை தவருனது என்று, இந்த ஏடுகள் கண்டிக்கவில்லை; உள்ளதை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றன. வேகமும் தாகமும் மிகுந்த வாழ்க்கை.

21—4—64

அருப்புக்கோட்டை பற்றிய ஆய்வுரையே பெரும் பகுதி இன்றும். வழக்கமாகக் காங்கிரசை ஆதரிக்கும் சில ஏடுகள்கூட, இந்தத் தேர்தலில், காங்கிரஸ் கட்சி ஜாதிவெறியை ஊட்டி வெற்றி பெற்றதைக் கண்டித்து எழுதி உள்ளன. இதைப் படித்துவிட்டு நண்பர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்; பாராட்டக்கூடச் செய்தார்கள். என்ன பிரயோஜனம்? தேர்தல் பிரசாரம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, காங்கிரஸ் ஜாதிவெறியைக் கிளப்புவதைக் கண்டித்து இந்த ஏடுகள் எழுதி இருந்தால், மக்களில் சிலராகிலும், காங்கிரசின் போக்கை வெறுத்து, எதிர்த்து ஓட்டளித்திருப்பார்கள் அப்போது வாய்மூடிக் கிடந்துவிட்டு, காங்கிரஸ் வெற்றி பெற்ற பிறகு, அதன் போக்கைக் கண்டித்து என்ன பலன்? என்று நான் கேட்டேன். உண்மைதான், இந்தப் பத்திரிகைகள், காங்கிரசின் போக்குக்கு உடந்தையாகத்தான் இருந்துவிட்டன என்று நண்பர்கள் பேசிக்கொண்டனர்.

சுந்தரம், ஓவியம் வரைவதற்கான வண்ணங்களைக் கேட்டதற்குத் தரமுடியாது என்று கூறிவிட்ட சிறை அதிகாரிகள், என்னகாரணத்தாலோ, தங்கள் மனதை மாற்றிக்கொண்டு, வண்ணங்களைக் கொடுத்துள்ளனர். இப்போது, ஓவியங்கள் தீட்டுவதில் நானும் முனைந்துவிட்டேன். ஒரு ராணுவத் தலைவன், மலைப்பகுதி எனும் இரண்டு ஓவியங்கள் தயாரித்திருக்கிறேன். ராணுவத் தலைவனுடைய தொப்பி சரியாக இல்லையே என்ருர்கள் நண்பர்கள், "அதெப்படி சரியாக இருக்க முடியும்; இவன் தோற்றுப்போன ராணுவத் தலைவன்; சரண் அடைவதற்காகச் செல்லும் வேளை; எந்தத் தொப்பி கிடைத்ததோ அதை எடுத்துப் போட்டுக்கொண்டு போகிருன் என்று காரணம் கூறினேன். ஐயோ பாவம்! என்று அனுதாபம் தெரிவித்தார்கள்; ராணுவத் தலைவனுக்கா, ஓவியம் போடத் தெரியாத எனக்கா என்று நான் கேட்கவில்லை. கேட்பானேன்!

22—4—64

இன்று என்னைத் திடுக்கிடச்செய்த செய்திதாங்கி இதழ்கள் வந்தன; நமது நெஞ்சத்தில் நீங்காத இடம் பெற்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் மறைந்தார் என்று செய்தி. எல்லோருக்கும், தாங்கொணுத வருத்தம். அதிர்ச்சி தரத்தக்க இழப்புகள் பலவற்றை இந்தமுறை சிறை வாசத்தின்போது நான் காணவேண்டி நேரிட்டுவிட்டதை எண்ணி மிகவும் வேதனைப்பட்டேன். தமிழகத்தில் தனிப் புகழுடன் விளங்கிய அந்தப் பாவேந்தனுடைய பார்வையே ஒரு கவிதை; பேச்சே காவியம்! அவருடன் உரையாடினுலே போதும், தமிழின் மாண்பினை உணரலாம். அவருடைய மறைவு, தமிழகத்துக்கு ஈடு செய்யவே முடியாத பெரும் இழப்பு.

இந்த வேதனையுடன் நாங்கள் இருந்ததால், நாற்பதாவது வட்டத்தில் நமது கழகத் தோழர் வெற்றி பெற்ற செய்தி மாலையில் அறிந்தபோது, சுவை எழவில்லை. பாரதிதாசனுடைய கவிதைகளைப்பற்றி எண்ணிக்கொண்டும் பேசிக்கொண்டும் இருந்தோம். நாங்கள் இருக்கும் பகுதியில், ஒரு அறையில், யாரோ ஒரு நண்பர் முன்பு எழுதிவிட்டுச் சென்றிருக்கிறார், புரட்சிக் கவிஞரின் கவிதையினை

"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை
எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை."

நாற்பதாவது வட்டத் தேர்தலின்போது கலாம் விளைவித்ததாக, மாநகராட்சிமன்ற உறுப்பினர்கள்

துளசிங்கம், கிருஷ்ணன் உள்ளிட்ட 15 கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டு, இன்று மாலை இங்கு அழைத்துவரப்பட்டிருக்கிறார்கள். நாங்கள் உள்ள பகுதிக்குப் பக்கத்தில் உள்ளனர். பார்க்கத்தான் முடிந்தது; பேச முடியவில்லை.

23—4—64

ஓவியம் வரைவதிலே ஒரு தனி மகிழ்ச்சி பிறக்கத்தான் செய்கிறது. நான் வரைந்த தோற்றுப்போன இராணுவத் தலைவன் படத்தை அன்பழகன் பார்த்துவிட்டு, "நன்றாக இருக்கிறது என்று பாராட்டுவார்கள்—இதை எழுதியது ஏழுவயதுச் சிறுவன் என்று கீழே குறிப்பெழுதினால்" என்று நகைச்சுவை தத்தும்பக் கூறினார். ஆனால் இன்று அன்பழகனே ஓவியம் வரையத் தொடங்கிவிட்டார். திருக்குறள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார் அல்லவா! அதனால் அவர் தீட்டத் தொடங்கிய முதல் ஓவியமும், திருவள்ளுவரே தான். ஆக இப்போது மூவர், ஓவியம் தீட்டும் பொழுது போக்கில் ஈடுபட்டிருக்கிறோம்—நான், சுந்தரம், அன்பழகன்.

மற்றோர் மலைக்காட்சி வரைந்தேன்-இது முன்பு வரைந்ததைவிட 'தரமாக' இருப்பதாக நண்பர்கள் கூறுகிறார்கள். கூறுகிறார்கள் என்றுதான் கூற முடிகிறது-கருதுகிறார்களா என்று அறிந்துகொள்ள முடியவில்லை. ஓவியம் வரைவதிலே ஓரளவு பயிற்சி இருந்தால், இங்கு திறமையை நேர்த்தியாக்கிக்கொள்ளலாம். எனக்கோ, மாணவப் பருவத்திலேயே ஓவியம் வரையத் திறமை ஏற்பட்டதில்லை. இத்தனைக்கும் என் மாமா, நான் படித்த பச்சையப்பன் பள்ளியில் ஓவிய ஆசிரியர்! ஆனால் திறமை இருக்கிறதோ இல்லையோ, நாமாக ஒரு ஓவியம் வரைந்து அதற்கு வண்ணமிட்டுப் பார்க்கும்போது, களிப்பு எழத்தான் செய்கிறது.

இன்று, யூதர்களின் வரலாறு பற்றிய ஒரு ஆங்கில ஏடு படிக்கத் துவங்கினேன். யூதர்கள் கொடியவர்கள், கல் மனம் படைத்தவர்கள், கடன்பட்டவர்களைக் கசக்கிப் பிழிபவர்கள் என்பதை விளக்கும் ஏடுகளே நிரம்ப உள்ளன. இந்த ஏடு அந்த வகையைச் சேர்ந்ததல்ல. யூதர்கள் கொடுமைகளை, இழிவுகளை, இன்னலை ஏற்றுக் கொண்டவர்கள், மதமாச்சரியம் காரணமாக, பல நாடுகளில், கிருத்தவ அரசு, யூதர்களை விரட்டியும், வாட்டியும் வந்தன; அவ்வளவையும் யூதர்கள் தாங்கிக் கொண்டு தங்கள் மார்க்கக் கோட்பாட்டை விடாப் பிடியாகக் காத்துவந்தனர் என்ற கருத்தை விளக்கும் ஏடு இது. யூதர்களின், மார்க்கத் தலைவன் என்று ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டால், அவர், மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான கொடுமைக்கு ஆளாகவேண்டி வந்துவிடும். சில கிருஸ்தவ நாட்டு அரசுகளில் ஒரு விபரீதமான திருநாள் இருந்து வந்ததாக இந்த ஏட்டிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. ஆண்டுக்கொரு நாள், கிருத்தவ அதிபர்கள், தமது நாட்டிலே உள்ள யூதர்களை, சந்தைச் சதுக்கத்தில் நிறுத்திவைத்து, கன்னத்தில் அறைவார்களாம்! இதைக்கண்டு, மக்கள் கைகொட்டிச் சிரிப்பார்களாம். சில காலத்திற்குப் பிறகு, ஒரு அதிபன், ஒரு குறிப்பிட்ட தொகை காணிக்கை செலுத்திவிட்டால், அப்படிச் செலுத்தும் யூதர்களை, கன்னத்தில் அறைவதுபோல, சற்றுத் தொலைவில் நின்றபடி—ஐந்தடி தொலைவில்—அறைவது போல, குறிகாட்டி விட்டுவிடுவது என்ற புதிய ஏற்பாட்டைப் புகுத்தினராம்.

ஏசுவைக் காட்டிக் கொடுத்தவர்கள், அவரைத் தேவகுமாரன் என்று ஏற்றுக்கொள்ளாதவர்கள் என்பதனால், யூதர்கள், கேவலமானவர்களாகக் கிருத்தவ மக்களால் கருதப்பட்டு வருவது நெடுங்காலத்து வழக்கம். இதுபற்றி அன்பழகனோடு பேசிக்கொண்டிருந்தேன். யூதர்களை இழிவாக நடத்திவரும் போக்கை இனியும் மேற்கொள்ளத் தேவையில்லை என்று போப் பாண்டவர் இரண்டாண்டுகளுக்கு முன்பு அறிவுரை வெளியிட்டதுபற்றிக் குறிப்பிட்டேன்.

யூதர்கள் நாடற்றவர்களாக, பல நாடுகளிலே தஞ்சம் புகுந்து வாழவேண்டியவர்களாக, பலப் பல நூற்றாண்டுகளாக வேதனைக்கு ஆளாகி இருந்த நிலையை மாற்றி, இப்போது, இஸ்ரேல் எனும் நாட்டைத் தமது தாயகமாக்கிக் கொண்டு, அதனைப் பொன்னகமாக மாற்றி அமைத்துக்கொண்டு வருகின்றனர். இதனை, அரபுக்கள், குறிப்பாக எகிப்துத் தலைவர் நாசர் புதிய ஆபத்து என்றும், மேற்கத்து வல்லரசுகளின் சதித் திட்டமென்றும் கூறி, தொடர்ந்து எதிர்ப்பு காட்டி வருகிறார்.

இஸ்ரேல் நாட்டுத் தூதர், தமது நாட்டு விடுதலை விழாவுக்காக, டில்லி, அசோகா ஓட்டலில் ஒரு தனி விருந்து ஏற்பாடு செய்ததும், அது முறைப்படி ஏற்பாடாகவில்லை என்ற காரணம் காட்டி, இந்திய அரசு, அந்த விருந்தை நிறுத்திவிட உத்திரவு பிறப்பித்ததும், பத்திரிகையில் வந்திருந்தது. நான் படித்துக்கொண்

விற்பனையாகிறது!

அண்ணாவின்
கருத்தோவியங்கள்

பாவையின் பயணம்
ரூ. 1-50

அரசாண்ட ஆண்டி
ரூ. 1-50

மதுரைக்கு டிக்கட் இல்லை
ரூ. 2-00

கிடைக்குமிடம்:
பரிமளம் பதிப்பகம்
சின்ன காஞ்சிபுரம்.

டிருக்கும் புத்தகத்தில் உள்ள பிரச்சினையோடு ஒட்டிய தாக இந்த நிகழ்ச்சி இருந்தது. எனவே அதுபற்றியும் பேசிக்கொண்டிருந்தோம்.

24—4—64

இன்று அன்பழகன், ஆங்கிலப் பெருங்கவிஞர் ஷேக்ஸ்பியரின் படம் வரைந்தார். அந்தப் பெருங் கவிஞருடைய 400-வது நினைவு நாள் கட்டுரைகள், படங்கள், இதழ்களில் நிரம்ப வெளியிடப்பட்டுள்ள நேரம்; எனவே இந்த ஓவியம் மிகப் பொருத்தமான நேரத்தில் அமைந்தது; தரமும் நல்லபடி அமைந்து விட்டது. அன்பழகன் மேற்பார்வையில், அந்த ஓவியத் துக்கு சுந்தரம் வண்ணம் தீட்டினார். புதிய பொலிவு பெற்றிருக்கிறது ஓவியம். ஆங்கில மொழியை எதிர்த்துவந்த தவற்றுக்குக்கழுவாய் தேடிக்கொள்வது போல இப்போது, நம்முடைய நாட்டு இதழ்கள் அடிக் கடி ஆங்கில மொழியின் அருமை பெருமைகளையும், உலகத் தொடர்புக்கு அம்மொழி மிகமிகத் தேவை என்பதையும் வலியுறுத்தி எழுதிக்கொண்டு வருகின் றன. அந்தப் 'புதிய திருப்பம்' காரணமாகவோ என் னவோ ஆங்கிலப் பெருங்கவிஞரின் நினைவு நாள் குறித்து, இதழ்கள் நிரம்ப அக்கறை காட்டி, பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளன.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் எவ்வளவோ பரவா யில்லை; அடித்துப் பேசிஇருக்கிறார்; இந்தி ஆட்சிமொழி யாக இரண்டு தலைமுறைகளாவது பிடிக்கும்; அறுபது ஆண்டுகள் ஆகும்; என்று பேசி இருக்கிறார்; இந்த அளவுக்குக் கூடத் துணிவில்லையே, நமது முதலமைச் சர் பக்தவத்சலத்திற்கு என்று பொன்னுவேலுவும் மற்றவர்களும் குறைபட்டுக்கொண்டார்கள். உண்மை தான்! டி. டி. கே. துணிவுடன்தான் பேசுகிறார்; ஆனால் அதேபோது, இது என்னுடைய சொந்தக் கருத்து என்று கூறி இருக்கிறார், அதனை மறந்துவிடக்கூடாது; கட்சி இந்தி ஆதிக்கத்திற்கு முனைகிறது என்று உண ரும்போது, இந்தி ஆதிக்கம் கூடாது, தேவையில்லை, என்று உள்ளூரக் கருதுபவர்கள், அந்தப் போக்கை எதிர்த்து வெளியே வந்து பணியாற்ற வேண்டுமே யன்றி, கூடிக் குலவிக்கொண்டே, என்னுடைய சொந்தக் கருத்து, இந்தி கூடாது என்பதுதான் என்று பேசுவதிலே, நேர்மையோ, தக்க பலனோ என்ன இருக்கமுடியும் என்று கேட்டேன். ஏன் சிலர் அப்படி இருக்கிறார்கள் என்றுநண்பர்கள் கேட்டனர். பதவியின் சுவை ஒரு காரணம்; மற்றோர் காரணம், இந்தியை ஆட்சி மொழி ஆக்குவதில் வெற்றி காண முடியாது என்று ஒரு நம்பிக்கை; மற்றோர் காரணம், நம்முடைய காலம் வரையில், ஆங்கிலம் இருக்கும்; பிறகு எப்ப டியோ ஆகிவிட்டுப் போகட்டும் என்றபொறுப்புணராத தன்மை, இவைகளே சிலருடைய போக்குக்குக் கார ணம் என்று குறிப்பிட்டேன்.

இன்று, ஜெயப்பிரகாஷ்நாராயணன் 1944-ல் லாகூர் கோட்டையில் சிறைவைக்கப்பட்டபோது, எழுதிய நினைவு நிகழ்ச்சிக் குறிப்புகள்பற்றிய புத்தகம் படித்தேன். இதிலே பெரும்பகுதி, பாகிஸ்தான் பிரச் சினைபற்றிய ஜெயப்பிரகாசருடைய கருத்தே நிரம்பி இருக்கிறது. அவர் அப்போது தெரிவித்துள்ள கருத் தைப் பார்க்கும்போது, பாகிஸ்தான் கூடாது என்று மட்டுமல்ல, பாகிஸ்தான் அமையாது என்றும் மிக உறுதியாக அவர் நம்பிக்கொண்டிருந்திருக்கிறார் என்று தெரிகிறது.


நாட்டு விடுதலைக்காக, ஆங்கில ஆதிக்கத்தை அகற்ற பலாத்கார முறைகளையும் பின்பற்றத்தான் வேண்டும் என்ற உறுதியையும், பலாத்காரத்தில், மறைந்திருந்து தாக்கும் முறையில், ஈடுபட்டிருந்தேன் என்று ஒப்புக்கொள்ளும் துணிவும் கொண்டவராக ஜெயப்பிரகாஸ்நாராயணன் இருந்திருக்கிறார் என்பது, இந்த ஏட்டின்மூலம் தெரிகிறது. அவ்வளவு உரம் படைத்தவர், இன்று, அரசியல் வேண்டாம் என்று ஒதுங்கிவிட்டிருப்பதும், சர்வோதய இயக்கவாதி ஆகி இருப்பதும், விசித்திரமான நிகழ்ச்சி என்றே தோன்று கிறது.

அப்துல்லா பிரச்சினையும், கம்யூனிஸ்டு கட்சியின் உட்போர் பிரச்சினையும், இங்குள்ள எங்களுக்கு, ஒவ் வொரு நாளும், பேசிக்கொள்ளும் பிரச்சினைகளாக உள்ளன. பத்திரிகைகள் கிடைத்த உடன், முதலில், இந்த இரண்டு பிரச்சினைகள் குறித்த பகுதிகளைத்தான் ஆவலுடன் படிக்கிறோம்.

இராஜ்யசபையில், அப்துல்லா பிரச்சினைபற்றிப் பேசிய, எ. டி. மணி என்பவர், அரசியல் சட்டத்தில் ஒரு தாளைக் கொளுத்துவதாகச் சொன்ன அண்ணு துரையைச் சிறையில் தள்ளிவிட்டு, இந்திய அரசியல் சட்டத்தைக் காலின்கீழ் போட்டுத்துவைக்கும் அப்துல் லாவை, உலாவர விடுகிறீகள்; இது எந்தவகையான நியாயம்!—என்று கேட்டிருக்கிறார். அவரும், வேறு சில ரும் பேசி இருப்பதிலிருந்து, அப்துல்லா எழுப்பிவிட் டுள்ள புயல்குறித்து, பெருத்த கவலையும் பீதியும் பாராளுமன்ற வட்டாரத்திலேயே கிளம்பிவிட்டிருக் கிறது என்று தெரிகிறது.

இராஜ்யசபையில் பேசிய எ. டி. மணி என்பவர் குறித்து என்னைப் பொன்னுவேல் கேட்டறிந்துகொண் டார்—மணி, தமிழகத்தவர்; ஐயர். பல ஆண்டுகளுக்கு முன்பே வடநாட்டில் சென்று தங்கிவிட்டவர்; நாகபுரியி லிருந்து நீண்டபல ஆண்டுகளாக வெளியிடப்பட்டு வரும் 'இதவாதா' எனும் ஆங்கில நாளிதழ் ஆசிரியர், 'இதவாதா' போபால் நகரிலிருந்தும் வெளியிடப்படு கிறது; மணி இப்போது போபாலில் இருந்துவருகிறார் சுயேச்சை உறுப்பினர்.

அண்ணன்,





ஊருக்கு நல்லது

"த"

வானமே இருண்டு கிடந்தது. காற்று வேறு 'ஊய் ஊய்' என்று ஊளையிட்டுக் கொண்டிருந்தது. இரண்டு நாட்களாக நல்ல மழை! பூமிக்கு விருந்துதான். அளவுக்கு மீறித் தின்றவன் புளியேப்பம் விடுவதைப்போல ஆங்காங்கே பள்ளங்களில் எல்லாம் நீர்நிறைந்து வழிந்து கொண்டிருந்தது. தவளைகளின் மகிழ்ச்சிக்கு அளவு இல்லை; தடை போடவும் யாரும் இல்லை. சங்கிலித் தொடர்போல அவற்றின் ஒலி ஓலமாகிக் கொண்டிருந்தது. ஊரே ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது. எண்சாண் உடம்பை ஒருசாணாகக் குறுக்கிக்கொண்டு அவரவர் முடங்கிக் கிடந்தனர். ஆனால் அந்தச் சிற்றூரில் ஒரே ஒரு ஆள் மட்டும் அந்நள்ளிரவிலும் உறக்கம் கொள்ளாமல் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தார்.

பாவம் முருகேசன். வயது எண்பது இருக்கும். தளர்ந்த உடல், தள்ளாத நிலை. எங்காவது ஒரு மூலையில் கிடந்து நாட்களை எண்ணிக்கொண்டிருக்க வேண்டிய வயது. ஆனால் முடிகிறதா? குளிரிலும் கும்மிருட்டிலும் கைத்தடியைத் தட்டித் தடவிக்கொண்டு வயலை வந்தடைந்தார். துன்பத்திலே கொஞ்சம் இன்பம் என்பார்களே அதுபோல, அந்த வயல் எங்கோ தொலைவிலே இல்லாமல் ஊருக்கு அருகில், தெருக்கோடியில் பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்தில் இருந்தது.

பள்ளிக்கூடத்திற்கும் அவருடைய வயலுக்கும் இடையிலே கொஞ்சம் இடம் காலியாக இருந்தது. அங்கே ஒரு கட்டில்; அதன் மீது வளைத்துப் பின்னப்பட்ட விதானம். இதுவே முருகேசனின் அரண்மனை. ஊருக்குள்ளே ஓட்டு வீடு ஒன்று இருக்கிறது. இருந்தாலும் அதிலே வாழக் கொடுத்து வைக்க வேண்டாமா? திருமணம் ஆன புதிதில் நான்கைந்து ஆண்டுகள் அந்த வீட்டில் உறங்கியது உண்டு. அதற்குப் பின் அது முடியவே இல்லை. வேலாத்தாளுக்கும் பெரிய வேதனைதான். என்ன செய்வது வயிறு ஒன்று இருக்கிறதே! மற்றவர்களுக்கும்தான் வயிறு இருக்கிறது. ஆனால் அவர்களுக் கெல்லாம் முருகேசனைப் போல ஒரே வயலை நம்பிக் கிடக்க வேண்டிய நிலை இல்லை. இது இல்லாவிட்டால் இன்னொன்று என்று எத்தனையோ வயல்கள் இருக்கின்றன. ஆனால் முருகேசனின் நிலை அப்படியல்ல. இருப்பதெல்லாம் அந்தத் தெருக்கோடி வயல் ஒன்றுதான். அதை நம்பித்தான் வாழ்க்கையை நடத்த வேண்டும். இதுவரையில் அது அப்படி ஒன்றும் ஏமாற்றியது இல்லை. வாய்க்கும் வயிற்றுக்கும் போதுமானது அதிலிருந்து கிடைத்துக்கொண்டுதான் இருக்கிறது. ஆனால் அதற்காக முருகேசன் படும்பாடு என்ன கொஞ்சமா நஞ்சமா? ஊருக்குப் பக்கத்தில் இருப்பதினால் போகவர வசதியாக இருக்கிறது என்பது என்னமோ உண்மைதான். அதிலே இன்னொரு தொல்லை இருக்கிறது. ஊருக்குள்ளிருந்து வெளிவரும் மாடுகன்றுகளின் தொல்லை எப்போதும் இருந்துகொண்டிருக்கிறது. கொஞ்சம் ஏமாந்தால் போதும் பட்டியிலிருந்து தப்பி வந்ததோ, வேண்டுமென்றே அவிழ்த்து விட்டதோ எதோ ஒன்று வந்து வாய்வைத்து விடும். இதற்காகத்தான் முருகேசன் அங்கேயே குடிசை போட்டுக் கொண்டு காத்திருப்பது.

ஊரிலே கூத்து, பொம்மலாட்டம், கதை என்று பொழுது போக்கு நிகழ்ச்சிகள் நடக்கும்போது முன் வரிசையிலே போய் உட்கார்ந்து கொண்டு சுவைக்க வேண்டும் என எல்லாரையும் போல முருகேசனுக்கும் ஆசைதான். ஆனால் முடிந்தால் தானே? அவனுக்குஇருந்த பொழுது போக்கெல்லாம் பள்ளிக்கூடத்துத் திண்ணைப் பேச்சுதான். வேலையற்ற இரண்டொருவர் அங்கே அமர்ந்து வம்பளந்து கொண்டிருப்பர். அப்பளத்திலிருந்து ஐக்கிய நாடுகள் சபைவரை எல்லாம் அறிந்தவர்கள் போலவும் எல்லாவற்றையும் அவர்களே தீர்த்துவைப்பதைப் போலவும் பேசிக்கொண்டிருப்பர். சற்றுநேரம் முருகேசன் அவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருப்பான். அவர்கள் பேசுவதிலே பாதிக்குமேல் அவனுக்கு விளங்குவதே இல்லை. ஏதாவது கேட்டுத் தெளியலாம் என்று எண்ணுவான், அதற்குள் அவனுக்கு வயல் நினைவு வந்துவிடும். எந்த மூலையில் யார் மாடு இறங்கிவிட்டதோ என்று எண்ணுவான். உடனே எழுந்து 'ஆய் ஏய்' என்று அதட்டிக்கொண்டே செல்வான். வயலிலே மாடு கன்று இருக்க வேண்டும் என்பதுஇல்லை. சற்றைக் கொருதரம் 'ஆய் ஊய்' என்று ஒலி எழுப்பினால் எதேனும் இருந்தாலும் தானாகப் போய்விடும் என்ற எண்ணம். தூக்கத்திலே விழித்துக் கொள்ளும்போதும் அப்படித்தான். கட்டிலிலே உட்கார்ந்தவாறே இரண்டு குரல் எழுப்பிவிட்டுப் படுத்துக்கொள்ளுவான். மறுகணம் உறக்கம் அவனை அணைத்துக் கொள்ளும். அன்றும் அப்படித்தான் மறுபடியும் உறங்க நினைத்தான். ஆனால் முடிந்தால்தானே? என்னென்னவோ நினைவுகள் வந்து அவனை வாட்டி எடுத்தன. நடுக்கும் குளிர் வேறு வருத்தியது. இந்தத்

தள்ளாத வயதில் இவ்வளவு பாடு யாருக்காக அவன் படவேண்டும்? அவன், மனைவி என்று இரண்டு பேருக்கு நாழி அரிசி இருந்தால் போதும். அதற்கு இவ்வளவு பாடு ஏன்? இத்தனையும் அவனுக்காகவா? இல்லை. இல்லவே இல்லை. அவன் மகன் முத்தய்யனுக்காகத்தான். முத்தய்யனுக்காக முருகேசன் பட்ட துன்பங்கள் ஒன்று இரண்டா? நாலு பேரைப் போலத் தன் பிள்ளையும் இரண்டு எழுத்து படிக்கவேண்டும் என்று பள்ளிக்கூடம் அனுப்பினான். அந்தப் பிள்ளை எனக்கும் பள்ளிக்கூடத்துக்கும் ஒத்து வராது என்று சொல்லிவிட்டான். சரி ஏரும் எருதுமாவது அவனுக்குத் துணையாக இருக்கட்டும் என நினைத்து வயல் வரப்பு வாய்க்கால் என்று இருந்தான். அவனே 'இந்த வம்பு எனக்கேன்' என்று விலகியே நிற்கின்றான்.

வயதுப் பிள்ளை எவ்வளவோ துணையாக இருக்கலாம். ஆனால் அவனே வலிந்து கொடுத்தால் தானே, முருகேசனுக்குச் சொல்ல முடியாத ஆத்திரம் ஆனால் யாரிடம் அதைக் காட்டுவது? தப்பித்தவறி ஒரு சொல் மகனைச் சொல்லிவிட்டால் போதும், வேலாத்தாள் உடனே கணவன்மீது பாய்ந்துவிடுகின்றாள். வீண் பொல்லாப்பு ஏன் என்று முருகேசன் வாய் மூடிக் கிடப்பான். 'திருமணம் ஆனால் எல்லாம் சரியாகிவிடும். நல்ல பெண்ணைப் பாருங்கள்' என்று கொஞ்ச நாட்களாக வேலாத்தாள் நச்சரிக்கத் தொடங்கிவிட்டாள். 'வேலை வரட்டும் — தானாக ஆகும்' என்று முருகேசன் அவளுக்குச் சொன்னாலும், வேலை வந்துவிட்டால் வேலைகளுக்குப் பணத்திற்கு என்ன செய்வது என்ற கவலை வேறு வாட்டியது. அதை எப்படியோ சரி செய்துகொள்ளலாம். இதுவரை ஒருவரிடம் கையை நீட்டிக் காலணை கடன் கேட்டதில்லை. இப்போது நல்லதற்குக் கேட்டால் இல்லை என்று சொல்லிவிடுவார்கள்–பார்க்கலாம் என்று துணிந்துவிட்டான். ஆனால் 'இந்தப் பயல் இப்படியே இருக்கிறானே' என்ற கவலைதான் அவனுக்குப் பெரியதாக இருந்தது. காற்று பலமாக வீசியது. குளிரும் மிகுந்தது. ஒரு நல்ல கம்பளி இருந்தால் இந்தக் குளிரை ஒருகை பார்த்துவிடுவான். ஆனால் இருந்த கம்பளியோ பொத்தல் பொத்தலாக இருந்து தொலைத்தது. அதற்குள் தன் உடலைச் சுருக்கிக்கொண்டான் 'ஆகட்டும் விடிந்ததும்; அவனை என்ன செய்கிறேன் பார்' என்று திடப்படுத்திக்கொண்டுதான் படுத்தான்.

விடிந்தது கிழக்கு வானில் கதிர் தோன்றும் முன்னே இருள் அகலுவதைப்போல, முத்தய்யன்மேல் அவனுக்கு இருந்த கோபமும் அகன்றது. வழக்கம்போலத் தன் கடமைகளை முடித்துக்கொண்டு பத்துமணிக்கு வயலுக்கு வந்தான். அங்கே அவனை வியப்பு எதிர் நோக்கியழைத்தது. யாரோ ஏழெட்டு பேர் தன் வயலில் இறங்கி இங்கும் அங்குமாக கையில் எதையோ சுமந்துகொண்டு அலைவதைக் கண்டான். யார்? என்ன செய்கிறார்கள்? என்பது ஒன்றும் விளங்கவில்லை, நெருங்கி வந்தபோது அந்த ஏழெட்டு பேரிலே தன் மகனும் இருக்கக் கண்டான். இன்னும் நெருங்கி வந்தபோது தன் மகனே அவர்களுக்கு இப்படி அப்படி என்று வழிகாட்டிக்கொண்டிருந்ததை அறிந்தான். முருகேசனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. திகைப்போடு அவர்களை வெறித்து நோக்கியவாறு வரப்பின் மீது வந்து நின்றான். முத்தையன் தன்னைச் சுட்டிக்காட்டி அவர்களிடம் என்னவோ சொன்னான். உடனே அவர்களிலே ஒருவர் முருகேசனை அணுகினர். அவர் அருகில் வரவரயாரோ அதிகாரி என்பதை உணர்ந்து கொண்டான். ஆனால் என்ன அதிகாரி தன் வயலில் அவருக்கு என்ன வேலை என்பது மட்டும் விளங்கவில்லை. முருகேசன் இதுவரை எந்தஅதிகாரியிடமும் நெருங்கிப் பேசியது இல்லை. வாய்ப்பே ஏற்படவில்லை. இதோ ஒரு அதிகாரி அவன் வயலிலேயே அவனை நெருங்கி வருகின்றார். வந்ததோடு மட்டுமா இருகையும் கூப்பி "வணக்கம் அய்யா" என்று வேறு சொல்கிறாரே! முருகேசன் தன் நிலைக்கு வரச் சற்று நேரம் ஆயிற்று. சற்று நேரம் அவரோடு பேசிய பின்னர் முருகேசனுக்கு அவர்மீது ஆத்திரம் தான் எழுந்தது. என்னவோ ஏதோ என்று முதலில் நினைத்திருந்தான் முருகேசன். ஆனால் அவர் அவன் கண்ணையே பறித்துப்போக வந்திருந்தார். கண்ணை வேண்டுமானாலும்கூட கொடுத்துவிடலாம். தடியிருக்கும்போது தட்டித் தடவி வழி அறிந்துகொள்வது என்ன அத்தனை சிரமமா? ஆனால் கண்ணை விட மேலான கழனியை அவனுடைய ஒரே வயலை-அவன் வாழ்வின் ஊற்றை அல்லவா அவர் கேட்கிறார். இந்த உலகத்தில் அவனுக்கு இருக்கும் ஒரே பற்றுக்கோடு அது. அதைப் பறித்தெறிந்துவிட வந்திருப்பவர் அதிகாரியானால் என்ன யாரானால் என்ன முருகேசன் எரிந்து விழுந்தான். "ஊருக்கு நல்லது உங்களுக்கும்..." என்று அவர் முடிக்கக்கூட இல்லை அவரை முடிக்க விடவில்லை அவன், முந்திக் கொண்டான். "ஊருக்கு நல்லதோ, உலகத்திற்கு நல்லதோ — இந்தப் பேச்சை இதோடு விடுங்கள் போங்கள் வெளியே" என்று பொரிந்தான். "உங்கள் மகன் சொன்னார் ....." என்று அதிகாரி தொடங்கினார். மகனுக்கென்ன எது வேண்டுமானாலும் சொல்லுவான். நீங்கள் போங்கள் அய்யா ரொம்பவும் புண்ணியமாகும் என்று கையெடுத்துக் கும்பிட்டான். அதிகாரிக்கு வேறு வழி இல்லை.

அன்று பகல் வீட்டிலே ஒரே அமர்க்களம். முருகேசன் 'ஓ' என்று இரைந்துகொண்டிருந்தான். அவர் மனைவி வேலாத்தாள் ஒரு பக்கமா

பொங்கல் மலர்

சந்தாதாரர்கள் கவனத்திற்கு

காஞ்சி பொங்கல் மலர் விலை ரூ. 1—50 ஆகும். முன் பணமாக ரூ. 1—50 அனுப்புகின்ற சந்தாதாருக்கு மட்டும்தான் மலர் அனுப்பப்படும்.

இளங்கோவன்.

இருந்து ஒடுங்கிக் கிடந்தாள். முத்தய்யன் தெருக்கதவை ஒருகையால் பிடித்தவாறு நின்று தன் தந்தையுடன் வாதிட்டுக்கொண்டிருந்தான்.

"என்னப்பா இப்படிச் செய்து விட்டீர்கள்? நான் அவரை அழைத்துவர எவ்வளவு பாடுபட்டேன். ஒரு கணத்தில் எல்லாவற்றையும் கெடுத்து விட்டீர்களே. எழுத்து மூலமாக ஒப்புதல் இல்லாமல் வரவே மாட்டேன் என்றார். நான் எவ்வளவு சொல்லி அவரை அழைத்துவந்தேன் தெரியுமா அப்பா?"

"ஏண்டா அழைத்துவந்தாய்! இருப்பது அது ஒரு துண்டுநிலம். அதையும் தொலைத்துத் தலைமுழுகிவிடலாம் என்று எண்ணமா? காலணா சேர்க்கத் துப்பு இல்லாவிட்டாலும்–இருப்பதைத் தொலைப்பதிலே ஒன்றும் குறைச்சல் இல்லை"

"என்னப்பா, எப்பொழுதும் ஒரே பல்லவிதானா? நான் என்ன இப்போ அதை விற்று வாணவேடிக்கை செய்யலாம் என்று சொல்கிறேன். நல்லதிற்குத்தானே அப்பா. கொடுத்தால் என்ன?"

"சரிதாண்டா, ஏன் பேசமாட்டாய் நீ? உனக்கு என்னடா தெரியும்? நமக்கு இருப்பது அது ஒன்றே ஒன்று. அதையும் கொடுத்துவிட்டுப் பிறகு என்ன செய்வது? தெருத் தெருவாகச் சுற்றிப் பிச்சை எடுக்கலாம் என்கிறுயா?"

"என்ன பேச்சு அப்பா, இது? ஏன் பிச்சை எடுக்கவேண்டும்? எனக்குக் கையும் காலும் இருக்கிறது. உழைக்கிறேன். பிழைத்துக் கொள்ளலாம் அப்பா?"

"இருக்கிற பூமியைக்கொடுத்து விட்டு எங்கேடா போய் உழைப்பதும் பிழைப்பதும்?"

"சொன்னால் கேளுங்கள் அப்பா. நாலுபேருக்கு நல்லது நடக்கிறது என்றால் அதனால் நாம் கொஞ்சம் துன்பப்பட்டாலும் தப்பு இல்லை அப்பா" என்றான்.

நெடுநேரம் தந்தைக்கும் மகனுக்கும் இப்படியே உரையாடல் நீண்டு கொண்டேயிருந்தது. முருகேசனை விட முத்தய்யனின் குரல் மிகுந்து கொண்டுவந்தது. சரி கடைசியில் அவன் தலையில் விழவேண்டிய பொறுப்புதானே, அவனே வேண்டாம் என்னும்போது தனக்குத் தொல்லை ஏன்! என்று எண்ணினானோ என்னவோ, "சரி முத்து. உன் விருப்பப்படியே ஆகட்டும். என்னவிலை கொடுப்பாகள்?" என்றான். இதைக் கேட்டதும் முத்தையன் துடித்துப்போனான். "ஐயயோ விலைக்கு அல்ல அப்பா—அது வேண்டாம். தானமாகத் தரவேண்டும் அப்பா" இதைக்கேட்டு முருகேசன் துடிக்கவில்லை; திகைத்துவிட்டான். என்ன சொல்வது என்றே தெரியாமல் திண்டாடினான். நாலு நாட்களாக வீட்டிலே அமைதி, அமைதி—வெறுமை—பாழ். பேச்சு இல்லை. மூச்சுமட்டுமே இருந்தது. 'பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' அல்லவா? முத்தையன் வென்றுவிட்டான். தனக்கு நினைவு தெரிந்த நாள் முதலாகத்தான் பழகிய, பக்குவப்படுத்திய நிலத்தை தன் உழைப்பை உண்டு உணவு அளித்த நிலத்தை, தன் வியர்வையால் நனைந்த பூமியை விட்டுப்பிரிய முருகேசன் தீர்மானித்துவிட்டான். வெறும் முருகேசன் கொடையாளி முருகேசன் ஆகிவிட்டான். எங்கோ நெடுந்தொலைவில் அணை ஒன்று கட்டி ஆற்றில் நீரைத் தேக்கினராம். அந்தத் தேகக்கத்திலிருந்து வரும் நீரை பத்து ஊர்களுக்குப் பிரித்துப் பகிர்ந்து அளிக்கத்தக்க மதுகு ஒன்று கட்ட இடத்தை அதிகாரிகள் தேடிக்கொண்டிருந்தனர். முத்தையன் வேண்டுகோளின்படி அந்த இடத்தைவந்து கண்டவர்கள் அது பொருத்தமான இடம்தான் என்றனர். ஆனால் கிழவனின் மனத்தை அறிந்த பிறகு கட்டாயப்படுத்தி அதனைப் பெற அவர்கள் விரும்பவில்லை. ஏற்ற வேறு இடமும் கிடைக்கவில்லை. இங்கிலையில் முருகேசன் மனம்மாறி இடம் கொடுக்க முன்வரவே வேலைகளைத் தொடங்கி விட்டனர். விழாவும் ஏற்பாடாகி விட்டது. பெரிய பந்தல், வளைவுகள், தோரணங்கள் — எல்லாம் எழிலுற விளங்கின.

விழாவுக்குத் தலைமை தாங்கி நடத்த அமைச்சரே வந்திருந்தார். முருகேசனுக்கு முன் வரிசையிலே இடம் கொடுத்திருந்தார்கள். அமைச்சர் பேசத்தொடங்கினார் "அன்பான பெரியோர்களே, தாய்மார்களே—இன்று இங்கு கட்டப்பட இருக்கும் மதகு ஒரு சாதாரண மதகு என்று நீங்கள் கருதக் கூடாது. தேக்கத்திலிருந்து வரும் நீரை அந்த மதகுதான் பத்து கிராமங்களுக்குப் பகிர்ந்து அனுப்பும். அந்த இடத்தை—நாலுபேருக்குப் பயன்படுகின்ற அந்த இடத்தை மனமுவந்து அளித்திருக்கும் திரு. முருகேசன் அவர்களை நான் மனமாரப் பாராட்டுகின்றேன். தனக்கென இருந்த அந்த ஒற்றை நிலத்தை ஊர் நலத்திற்காகத் துறக்க முன்வந்து அவர் செய்துள்ள தியாகம் மகத்தானது. மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கக்கூடியது. அவர் மகன் செய்திருக்கும் உதவியையும் மறக்க இயலாது. அதற்குக் கைமாறுக அல்ல — நல்லெண்ணத்தின் அறிகுறியாக மதகு மேற்பார்வை பணிகளில் ஒன்றை முத்தையனுக்கு அரசாங்கம் அளிக்க முன்வந்துள்ளது. இப்போது உங்கள் சார்பில் முருகேசனைக் கவுரவிக்கும் வகையில் இந்தப் பொன்னாடையை அவருக்கு அணிவிக்கிறன்" என்று ஆடையை அணிவித்தார். ஆரவாரம் வானைமுட்டியது. நிமிர்ந்து நோக்கிய முருகேசன் கண்முன்னே கூட்டம் தெரியவில்லை; மனிதர்க்கு அமுதமான நீர் நிறைந்த மதகும் அதன் கரையிலே நின்ற தன் மகனுமே தெரிந்தனர்.

அடுத்த மழையின்போது முருகேசன் 'ஆய்ஊய்' என்று இல்லாத மாடுகளை அதட்டிக் கொண்டிருக்கவில்லை; அதற்கான அவசியம் இல்லை.

*

முகப்பு விளக்கம்

நோபல் பரிசு பெறுவதைப் பெருமைக்குரியதாகவே கருதுவர். ஆனால் பிராஞ்சு நாட்டைச் சேர்ந்த ஜீன்பால் சார்ட்ரீ அவர்களோ நோபல் பரிசு தனக்கு வேண்டாம் என மறுத்துவிட்டார். பரிசின்மீது, பரிசு அளிப்போர் மீது வெறுப்பு ஏற்பட்டதால் அல்ல--எழுத்தாளன் எந்த அமைப்புக்குள்ளும் சிக்கிக் கொள்ளக்கூடாது என்று அவர் திடமாக நம்புவதால் இந்த ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு தனக்கு அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டபோது அதை ஏற்க மறுத்துவிட்டார்.

இதற்கு முன்னும் இவர் இது போல் பலமுறை தமக்கு அளிக்கப்பட இருந்த பட்டங்களையும் சிறப்புக்களையும் ஏற்க மறுத்துவிட்டார். பிரான்சில் மிக உயர்ந்த பட்டமாகக் கருதப்படும் 'லீஜியன் ஆப் ஆனர்' எனபதையே இவர் ஏற்கவில்லை என்றால் கொண்ட கொள்கையில் எவ்வளவு உறுதியுடையவர் என்பது விளங்குகின்றது அல்லவா?

அதிசய மனிதர் சார்ட்ரீ 1905-ம் ஆண்டு பாரிஸ் நகரில் பிறந்தவர். புகழ்மிக்க ஆல்பர்ட் ஸ்விட்சர் இவருக்கு உறவினர் ஆவார்.

விலை 20 காசு காஞ்சி Regd. No. M. 7894

காலிழந்தான்!

காதலில் தோல்வி தேடிக் கொண்ட இளைஞனின் உள்ளம் உருக்கும் கதை.

'சுமார்' சுப்பய்யா!

வெள்ளை உள்ளம்-தூய்மைக்கு எடுத்துக்காட்டு என்கிறோம் அல்லவா! அது வாழ்க்கையில் தொடர்ந்து தோல்வியைத் தருகிறது, சுப்பய்யாவுக்கு. பரிதாபப் படுகிறோம் அந்நிலை கண்டு. இக் கதை அந்த நிலை விளக்கம்.

இரு கடிதங்கள்!

எழுத்தாளர், கற்பனை உலகிலும் உலவுகிறார், உண்மை வாழ்க்கையிலும் ஈடுபடுகிறார். இரு கடிதங்கள் எழுதுகிறார் எழுத்தாளர்-இரு வேறு உலகம் தெரிகிறது.

அண்ணா காஞ்சி

பொங்கல் மலரில்

சிந்தனைக்குச் சுவையூட்டும்
சிறு கதைகள்.
தந்துள்ளார்.

★

காஞ்சி பொங்கல் மலர்

பலமுறை படித்து இன்புறத்தக்க
சுவைமிகு விருந்து!

★

பழகு மொழியும் குழவியின்
இதழ்ச் சுவைக்கு அடுத்தபடி
உளது என்று கூறி
மகிழத்தக்கது

காஞ்சி
பொங்கல் மலர்

பித்தனை அல்ல! பொன்னேதான்!

மகன் களவாடினன் என்று தண்டனை தந்ததுவழக்குமன்றம். தந்தை தத்தளிக்கிறார், மகன் பித்தனை அல்ல! பொன்னேதான் என்று!! விந்தைமிகு மைந்தனையும், சிந்தை நொந்த தகப்பனையும், காண்கிறீர்கள் இந்தக் கதையில்.

உடை போட்டதும்!

உடைக்கும் உரைக்கும் உள்ள தொடர்பு விளக்கம் இந்தக் கதை உடையிலே மாறறம், உரையிலே தலைகீழ் மாற்றம்.

விழுப்புரம் சந்திப்பு!

பழமைக்கும் புதுமைக்கும் போட்டி நடந்திடும் சூழ் நிலை விளக்கம், இரு கருத்துகளும் சந்திக்கும் இடம்.

காடுடையார்!

கவிதை வடிவக் கருத்தோவியம் இதில் தவமிருந்த புலியும் வர மளிக்க வந்த சிவனும் சந்திக்கும் காட்சி காண்கிறீர்கள்.

பக்கம் 100 விலை 1—50

கல்லும் கண்ணுடித் துண்டும்!

எத்தனை காலத்துக்குத்தான் மனிதர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிப் படித்தபடி இருப்பது. கல்லுக்கும் கண்ணுடித் துண்டுக்கும்கூட வாழ்க்கை உண்டல்லவா, அது இது.

வழுக்கி விழுந்தவர்கள்!

எத்தனையோ விதத்தில் வழுக்கி விழுகிறார்கள்! இங்கு மூவர் வழுக்கி விழுகிறார்கள்!! சுவர் தாண்டி ஒருவன் - ஏணிமீதேறி ஒருவன்-எண்ணெய் வழுக்கி ஒருவன்!! மூவரையும் படம் பிடித்துக் காட்டுகிறது இக்கதை; உலகின் ஒருமூலை தெரிகிறது.

வேட்பாளர் வருகிறார்!

கவிதை நடையில்-உங்கள் கண் முன் நாடெங்கும் இந்த நாட்களில் நடமாடும் காங்கிரஸ்காரர் தெரிகிறார்.

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனுல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.